விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 தை 03 திங்கட்கிழமை (16.01.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 28

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து



செஞ்சோலை சிறுவர் இல்ல கட்டடத்தை தேசியத் தலைவர் வே.பிரபாகரன் நேற்றுத் திறந்துவைத்தார். அதற்கு முன்னதாக பொதுச்சுடரினை ஏற்றிவைத்து வளாகத்தின் பெயர்ப் பலகையையும் திறந்துவைத்தார். தொடர்ந்து செஞ்சோலை மாணவர்களின் கண்காட்சியும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தளபதிகள், போராளிகள், கல்விச் சமூகத்தினர், செஞ்சோலைச் சிறுவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# பேச்சை உடனடியாக ஆரம்பிக்குமாறு

# அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு அழுத்தம்

## தாமதிக்கவேண்டாமென வேண்டுகோள்

(கொழும்பு)

ஐரோப்பிய நாடொன்றின் தலைநகரில் விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சு வார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு மூத்த அமைச்சர்கள் குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கோரியுள்ளது. ஜனாதிபதியை நேற்று நேரில்சென்று சந்தித்தபோதே அக்குழுவினர் இக்கோரிக்கையை வெளியிட்டுள்ளனர்.

மின்சக்தி எரிபொருள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன, கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த, சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோராலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க புலனாய்வுக் குழு நாளை கொழும்பு வருகை

அமெரிக்க புலனாய்வுத்துறையான எஃப்.பி.ஐ அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் 24ம் திகதி கொழும்பு வரவுள்ளது. இலங்கையில் அதிகரித்துவரும் வன்முறைகள், யுத்த நிறுத்த ஒப்பந்தம் முறிவடையும் அபாயநிலை ஆகியவற்றைக் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் பொருட்டு நடவடிக்கை எடுக்கக்கோரி அண்மையில் அமெரிக்காவுக்குச் சென்ற இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேரடியாக விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இக்குழுவினரின் வருகை அமையவுள்ளதாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்துறையில் குடும்பஸ்தர் கொலை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை சுருவில் வீதியில் ஊர் காவற்துறை நீதிமன்றத்துக்கு அருகில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் 5 பிள்ளைகளின் தந்தையான தர்மராஜா தர்மசீலன் (வயது 37) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

நேற்று முன்தினம் அவர் நண்பர்கள் வீட்டில் இருக்கும்போது அங்கு வந்த இனந்தெரியாதோர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் பின்னர் அவரைக் கடத்திச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் அவர் நேற்றுக்காலை கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் சூட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற ஊர்காவற்துறை (12 ஆம் பக்கம் பார்க்க)

## தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் நாளை கிளிநொச்சிக்கு

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் நாளை கிளிநொச்சிக்குச் செல்லவுள்ளார். எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரும் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் சந் திப்புக்கள் குறித்து நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதற்காகவே அவர் அங்கு செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரணியில் இளைஞன் சுட்டுக்கொலை

(கொடிகாமம்)

வரணி குடமியன் பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த செல்லத்துரை யோகராசா (வயது 26) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். நேற்றுக்காலை கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்தவேளை அவரது வீட்டுக்கு அருகில் இருந்த பற்றைக்குள் பதுங்கியிருந்தவர்களே அவரின் மீது தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி மாவட்ட நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்குமாறு கொடிகாமம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-4,34)

## பொங்குதமிழ் சமூகத்தினருடன் பிரதிப்பொலிஸ்மா அதிபர் சந்திப்பு

## திருமலையில் ஹர்த்தால் இடைநிறுத்தம்

(திருகோணமலை)

திருகோணமலையில் பொங்கு தமிழ் சமூகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த ஹர்த்தாலுடனான கடையடைப்பு போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு -கிழக்கு மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் பாலசூரியவுடன் இடம்பெற்ற சந்திப்பினையடுத்தே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை பெரியகடை கடற்கரைப் பகுதியில் 5 அப்பாவி தமிழ் மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கும், கடந்த சனிக்கிழமை அநுராதபுரம் சந்தியில் உள்ள நகராட்சிமன்ற உத்தியோகஸ்த்தர் குடியிருப்பு மீது நடாத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த நால்வர் பலத்த காயங்களுக்கு உள்ளான சம்பவத்திற்கும் எதிர்ப்புத் தெரிவித்தே இக் ஹர்த்தால், கடையடைப்பு என்பன நடாத்தப்பட்டு வந்தது.

இச் சந்திப்பில் பொங்கு தமிழ் அமைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் கிரனைட் வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் உள்ள பெரியபுலம் பாடசாலைக்கு அருகாமையில் நேற்று நண்பகல் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார்.சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களே கைக்குண்டை வீசிவிட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஊடகவியலாளர் உரிமையில் அரசின் தலையீடு; பத்திரிகை சுதந்திரத்துக்கே வரும் ஆபத்து

ஊடகவியலாளர்களின் உயிருக்கு உலைவைக்கும் நிகழ்ச்சிகளும் ஊடகவியலாளரின் உரிமையில் தலையிடும் நிகழ்ச்சிகளும் இலங்கையில் தொடர்ந்து நடைபெறுகின்றன. வாள் முனையை விட தமிழ்ப்பேனா முனையின் வலிமை சிங்கள வல்லாண்மையை சிதறடித்து சின்னாபின்னப்படுத்துவதும் உறுதி. பொய்யும் புரட்டும் பொசுக்கப்படும் வாய்மை இறுதியிலேயே வையத்தை ஆளும்.

ஊடக உரிமையை எவரும் எளிதில் புறக்கணித்து வெற்றி பெற்றதர்க வரலாறு இல்லை. சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம் பலரைச் சிலகாலம் ஏமாற்ற முடியாது. ஊடகவியலாளர்களை ஏமாற்றி எவரும் வெற்றிபெற்றதாக வரலாறு இல்லை. பத்திரிகை சுதந்திரம் என்பது ஒருவரின் அடிப்படை உரிமை. அந்த உரிமையில் எவருக்கும் தலையிடும் அதிகாரம் இல்லை. தமிழ் ஊடகங்கள் எழுப்புகின்ற குரல் சிங்கள அரசுக்கு கசப்பாக இருக்கலாம். உண்மை பெரிதும் கசப்பாக இருப்பது தவிர்க்கமுடியாதது. செய்திகள் எப்பொழுதும் உண்மையாக அமைய வேண்டும். ஆனால் அதை ஒட்டிய கருத்துக்களை எவரும் சுதந்திரமாக எழுதலாம். இதை ஆங்கிலாத்தில் **"facts are sacred but comment is free"** (செய்திகள் புனிதமானவை ஆனால் அவையொட்டிய கருத்துக்களை எவரும் சுதந்திரமாக வழங்கலாம்) எனக் கூறுவர்.

பத்திரிகை சுதந்திரம் பற்றி மெய்யியல் வல்லுநர் தத்துவஞானி வோல்ரர் (Voltaire) கூறியுள்ள கருத்து, நாம் எம் நெஞ்சில் ஆழமாகப் பதிக்க வேண்டிய கருததாகும். இதோ அவர் மொழிந்தவை **"I do not agree with a word of what you say, but I' ll defend to the death your right to say it"** திட்டமிட்டு தமிழர்களை ஒளித்துக் கட்டுகின்ற சிங்கள அரசு தமிழ் மக்களுக்காக ஓங்கிக் குரல் எழுப்புமஊடகங்களில குரல் வளையையும் நசுக்க முனைந் துள்ளது. தமிழக ஊடகங்களில் கைவைத்த வெறி கொண்ட சிங்கள அரசு மகாராஜா கூட்டு நிறுவனத்தின் தலைவரையே சிறையில் இருக்கும் சிறைக்கைதியின் துணைகொண்டு சாகடிக்க முயல்வதாகவும் இதற்குக் கோடிக கணக்கில் பேரம் பேசப்பட்டதாகவும் ஊடகங்கள் அனைத்திலும் வெளிவந்த செய்தி பரபரப்பை ஏற்படுத்தி அனைவரையும் கதிகலங்க வைத்துள்ளது.

ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்து மனிதனைக்கடிக்குமாம் வெறிநாய் என்பதற்கமைய தமிழ் ஊடகவியலாளராகிய நடேசன் சிவராமன் ஆகியோரை அரச உளவுபடையும் ஆயுதக்குழுக்களும் ஒன்றிணைந்து சாகடித்த நிகழ்ச்சியை நாம் மறக்க முனைந்தாலும் மறக்க முடியாது. தமிழ் ஊடகவியலாளர்களில் கைவைத்த சிங்கள அரசு சிங்கள ஆங்கில ஊடகங்களை இயககுகின்ற சிங்கள தலைமைப்பீடத்தின் உயிருக்கே உலைவைக்க துடியாய்த் துடிக்கின்றன. கடந்த ஆண்டு மட்டும் உலகளாவிய அளவில் 41 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர் என நியூயோக்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஊடகவியலாளரைப் பாதுகாக்கும் அமைப்புத் தெரிவித்துள்ளது. உலக அளவில் ஊடகவிய லாளர்களின் கடந்த ஆண்டு நிலை பற்றி வெளியிட்ட அறிக்கையில் பின்வரும் விபரங்களை இவ் அமைப்புத் தருகின்றது. 41 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் 1/3 பகுதியினர் பத்திரிகை விமர்சகராகப் பணியாற்றியவர்கள் இதுவே பெரும் குற்றமென்று கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டில் ஈராக்கில் மட்டும் 21 ஊடகவியலாளர்கள் கொல்லீப்பட்டுள்ளனர். லெபனான், ஒரிசியா, பங்களாதேஷ பாகிஸதான்,சோமாலியா முதலிய இடங்களில் கடந்த ஆண்டு பலர் கொலலப்பட்டனர். இலங்கையில் கொல்லப்பட்டவர் இருவர் எனக் கருதப்படும் போது நடேசனையும் சிவராமனையும் நாம் மறப்பதற்கில்லை.

ஊடகவியலாளர் அமைப்புக்குள் ஆயிரம் வேறுபாடுகள் இருக்கலாம். சிங்களவர், தமிழர் என்ற இனவேற்றுமையும் தலைதூக்கலாம் எனினும் மாறுபட்டு, வேறுபட்டு, கூறுபட்டுக் கிடக்கும் இந்த ஊடகங்கள் ஒன்றுபட்டுக் குரல் எழுபபத் தயங்கின் அவர்கள் தற்கொலை செய்யத் துணிந்து விட்டார்கள் என்றே பொருள் கொள்ளவேண்டும்.

குறிப்பாக தமிழ் ஊடகவியலாளர்கள் தமது பிரத்தியேக அடையாள அட்டைகளைக் காண்பிக்கின்ற போது அவற்றைக் காவற்றுறையினரும் படையினரும் அலட்சியம் செய்வது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பத்திரிகை யாளரை அவமதிக்கும் படையினரதும் பொலிஸாரினதும் இத் தப்பான போக்கு உடனடியாக நிறுத்தப்படும என ஊடகத்துறை அமைச்சர் உறுதி அளித்துள்ளார். அமைச்சர்களின் உறுதிமொழிகள் எல்லாம் காற்றோடு கலந்த நிலையில் இவரின் உறுதி மொழியை நம்புவதில் எமக்குப் பெரும் தயக்கம் உண்டு.

**மா.க.ஈழவேந்தன்**

## ஆய்வுகளை நடத்த அதிக நிதி ஒதுக்கீடு

விஞ்ஞானிகளும், தொழில் நுட்பவியலாளர்களும் ஆய்வுகளை நடத்தும் பொருட்டு முன்னைய வருடங்களைவிட இந்த வருடம் கூடுதல் நிதி ஒதுக்கீ செய்யப்பட்டுள்ளதாக விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் இந்த வருடம் முன்னரைவிட அதிகளவான வேலைகளைச் செய்ய முடியுமென்று அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

பல வருடங்களாக விஞ்ஞான ஆய்வு நிலையத்திற்கு நிதி யொதுக்கப்படாமல் இருந்ததாகவும், இம்முறை 300 மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## சமூகப்பணி குறித்த டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

இலங்கை சமூக சேவைக் கல்லூரியின் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தில் சமூகப்பணி தொடர்பான இரண்டுவருட டிப்ளோமா பாடநெறியைப் பயில்வதற்கு புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படவிருப்பதாக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் குறிப்பிட்ட சில அரச பதவிகளில் மூன்று வருடகால சேவையை பூர்த்தி செய்தவர்களும் சமூக சேவைக் கல்லூரியில் அனுமதி பெறுவதற்காக விண்ணப்பிக்க முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

போட்டிப்பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். கொழும்பு, கண்டி, மாத்தளை, அம்பாறை, அனுராதபுரம், வவுனியா ஆகிய ஆறு மாவட்டங்களில் போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது. தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி பாடநெறி ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பணிப் பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (க-9)

## விபத்தில் காயம்

பொம்மை வெளிப்பகுதியில் யாழ்.நோக்கிவந்து கொண்டிருந்த தனியார் மினிபஸ்ஸும் மினிபஸ்ஸிற்கு பின்னால் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிலும் விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

விஸ்வலிங்கம்-குணலிங்கம் (வயது-50), அரியச்சந்திரன்-குகதாசன் (வயது-29) ஆகிய இருவருமே படுகாயமடைந்து தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.(த-132,133)

## இராசிபலன்

**16.01.2006**
**(தை 3, திங்கட்கிழமை)**
**துதியை முன்னிரவு 7.28 மணிவரை**
**ஆயிலியம் பின்னிரவு 2.53மணிவரை**
**இராகுகாலம் 8.04-9.34 மணிவரை**
**சுபநேரம் 12.34-2.04 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | தாய்வழி உறவு, எதிர்பாராத நன்மை, நிலை மாற்றம், மனச்சோர்வு. |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பெருமையடைதல், பொருள் சேர்க்கை, உறவினர் உதவி. |
| மிதுனம் | விவாதம், பொருள் விரயம், பூர்வபுண்ணிய கருமம், திடீர் நன்மை. |
| கடகம் | நண்பர்கள் சந்திப்பு, புதியதிருப்பம், நல்ல முயற்சி, போசன நன்மை. |
| சிங்கம் | பிரயாணம், காரிய அலைச்சல், அமைதிக் குறைவு, அதிக செலவு. |
| கன்னி | எதிர்பாராத நன்மை, உறவினர் வருகை, கீர்த்தி, முயற்சி கைகூடும். |
| துலாம் | தெய்வசிந்தை, அதிக செயற்பாடு, முயற்சி பலிதம், போசன நன்மை. |
| விருச்சிகம் | மாதர் நட்பு, தொழில் நன்மை, பிரயாணம், கட்டுப்பாடு. |
| தனுசு | அபகீர்த்தி, காரியதடங்கல், உடல்நலக் குறைவு, பிரயாண பயம். |
| மகரம் | தெய்வசிந்தை, முயற்சி கைகூடும், அபூர்வ சந்திப்பு, விருந்துபசாரம். |
| கும்பம் | சகோதரர் உதவி, சொத்துக்களால் நன்மை, காரிய சித்தி, போசனசுகம். |
| மீனம் | வியாபார நன்மை, முயற்சி தாமதம், பண விரயம், கௌரவக்குறைவு. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

## இம்மாதம் முதல் சகல அரசாங்க ஊழியர்களும் சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொள்ளலாம்

(கொழும்பு)

அரசாங்க உத்தியோகத்தர்களின் அதிகரிக்கப்பட்ட சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்களை பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான 12-01-2006ஆம் திகதி இடப்பட்ட சுற்றுநிருபம் சகல அமைச்சுக்களின் செயலாளர் மற்றும் திணைக்களம் என்பவற்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் முழுமையான விபரங்களைப் பார்வையிடலாம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷாவின் மஹிந்த சிந்தனையை அடிப்படையாகக்கொண்ட புதிய வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக சம்பள அதிகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் சம்பள அதிகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைவாக அதிகரிக்கப்பட்ட சம்பளக் கொடுப்பனவை இம் மாதம் தொடக்கம் சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் பெற்றுக் கொள்ள முடியும் என்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மேலாக மாதாந்தம் ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுப்படியும் மேலதிகமாக வழங்கப் படவுள்ளது. வாழ்க்கைச் செலவுச் சுட்டெண், ஒவ்வொரு ஆண்டும் யூன் மாதம் 30ஆம் திகதியும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதியும் கணிப்பீடு செய்யப்பட்டு அதிகரிக்கப்படும்.

ஒவ்வொரு வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணுக்கும் மேலதிகமாக இரண்டு ரூபா ஐம்பது சதம் வழங்கப்படவுள்ளது. அரசாங்க உத்தியோகத்தர்களின் இணைந்த படிக்கொடுப்பனவுகள், போக்குவரத்துப் படிகள் மற்றும் இலவச புகையிரத ஆணைச்சீட்டுக் கொடுப்பனவுகள் என்பன அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (க-39)

## சிறுவர் நாடகமேடையேற்றம்

(யாழ்ப்பாணம்)

பல பாடசாலைகளின் வேண்டுகோளிற்கு இணங்க செயல்திறன் அரங்க இயக்கத்தினால் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆரம்பப்பாடசாலைகளில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'கண்மணிக்குட்டியர்' சிறுவர் நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

வளரும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கச் செயற்பாடுகளை செயல்திறன் அரங்க இயக்கமானது முன்னெடுத்து வருகின்றது.

சிறுவர் அரங்கிற்கான நாடகங்களான பஞ்சவர்ண நரியர், பந்தயக்குதிரையார், மந்திரத்தால் மழை போன்ற நாடகங்களை இந் நிறுவனமானது யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆரம்பப்பாடசாலைகளிலும் கொழும்பு உட்பட வெளிமாவட்டப் பிரதேசங்களிலும் மேடையேற்றியமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று 'கண்மணிக்குட்டியர்' சிறுவர் நாடகமானது யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறுவர் பாடசாலைகளில் இம்மாத இறுதிக்குள் மேடையேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச் சிறுவர் நாடகமானது ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். பாடசாலைகளில் மேடையேற்ற விரும்பும் ஆசிரியர்கள் மேடையேற்ற அனுமதிகளை அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் இயங்குகின்ற செயல்திறன் அரங்க இயக்கத்துடன் தொடர்புகொண்டு மேற்கொள்ள முடியும். (க-19)

## பெறுபேறுகள் இன்று கையளிக்கப்படும்

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் விஞ்ஞான பாடத்துக்கான பெறுபேறுகள் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு, இன்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவீடம் கையளிக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜயந்த தெரிவித்துள்ளார்.

கணனியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கடந்த வருடம் மே மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையின் இரசாயன விஞ்ஞான பாடப் பகுதி-1 இன் விடைத்தாள்களை மீளவும் மீளாய்வு செய்ய பரீட்சைத் திணைக்களம் ஏற்கனவே தீர்மானித்திருந்தது.

இவற்றைக் கருத்திற்கொண்டு விஞ்ஞான பாடத்தின் விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்தவற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க நடவடிக்கை எடுத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பிரதி அதிபர் என்.குணசீலன் 35 வருட ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியான இவர் வவுனியா புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் 1970ஆம் ஆண்டு ஆசிரியத்தொழிலை ஆரம்பித்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, புத்தூர் சோமாஸ்கந்தாக்கல்லூரி ஆகியனவற்றில் ஆசிரியராகவும் வடமராட்சி வலயக்கல்வி அலுவலக விஞ்ஞானபாட ஆளணியினராகவும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய நிலைய முகாமையாளராகவும், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி தொலைக் கல்வி நிலைய சிரேஷ்ட போதனாசிரியராகவும் பணியாற்றி ஹாட்லிக் கல்லூரியின் பிரதி அதிபராக இருந்து



இளைப்பாறியுள்ளார்.சமூக சேவையில் , இவர் தொண்டமானாறு வெளிக்கள நிலைய நிர்வாக சபை உறுப்பினராகவும், ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயற் குழு உறுப்பினராகவும் வடமராட்சி ஆசிரியர் சங்கச் செயலாளராகவும் பருத்தித்துறை நகர சபை வரியிறுப்பாளர் சங்கச் செயலாளராகவும் பருத்தித்துறைப் பிரஜைகள் குழுப் பொறுப்பாளராகவும் பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபை உறுப்பினராகவும் சேவை யாற்றியுள்ளார். (த-52)

# தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகளை உடன் தடுத்து நிறுத்த வேண்டும்

## கஜேந்திரன் எம்.பி.க.கா.குழுவுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் மேற்கொள்ளும் தாக்குதல் மற்றும் வன்முறைகளை உட



னடியாக தடுத்து நிறுத்தி குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை கைதுசெய்து சட்டத்தின்முன் நிறுத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கடந்தவாரம் புத்தூரில் சொக்கத்திடல் கிராமத்திற்குச் சென்ற படையினர் தம்பு நடேசன் என்பவரை கடத்திச் சென்று வெட்டியும், கொத்தியும், சித்திரவதை செய்துவிட்டு சிறுப்பிட்டிப்பகுதியில் உடலை போட்டு விட்டுச் சென்றனர்.

அதன்பின்னர் தினமும் 10.30மணிக்குப் பின்னர் அக் கிராமத்திற்குச் செல்லும் படையினர் இரவு வேளைகளில் தகாத வார்த்தைகளால் பெண்களையும் ஆண்களையும் திட்டித் தீர்ப்பதுடன் கொலை செய்யப்போவதாக மிரட்டி வருகின்றனர்.

சில இளைஞர்களை பெயர் சொல்லி விசாரிப்பதுடன் விரைவில் கொலை செய்யப் போவதாகவும் மிரட்டி வருகின்றனர்.

பெணகள் மீதும் பாலியல் துஷ்பிரயோகங்களை செய்யப்போவதாக மிரட்டிவருகின்றனர்.

தைப்பொங்கல் தினத்திலும் இரவு வீடு வீடாகச் சென்று மிரட்டியுள்ளனர்.

இதனால் மரண பயத்தில் மக்கள் வீடுகளில் இரவில் தங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. படையினரது இக் கெடுபிடிகளை தடுத்துநிறுத்த உடன் நடவடிக்கை எடுககும்படி அன்புடன் வேண்டுகின்றேன்.

அத்துடன் நேற்று ஊர்காவற்துறையில் வைத்து இளைஞர் ஒருவர் ஈ.பி.டி.பியினரால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளதாக பொது மக்கள தெரிவித்துள்ளனர்.

அச்சம்பவத்தை நேரில் கண்டசாட்சி ஒருவரை கடற்படையினரும் பொலிஸாரும் ஈ.பி. டி.பியினரும் இணைந்து பிடித்துச் சென்றுள்ளனர்.

இதுதொடர்பாக குற்றவாளிகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகின்றேன்.

குடாநாட்டில்பரவலாக படையினர் சோதனை கெடுபிடிகளில் ஈடுபடுவதுடன் தமது வாகனப் போக்குவரத்திற்காக பொதுமக்களின் போக்குவரத்தினை பலமணி நேரம் தடுத்து வைக்கின்றனர்.

நேற்று பலாலி வீதியில் ஒரு மணி நேரம் பொதுமக்களின் போக்குவரத்தினை படையினர் தடைசெய்து வைத்திருந்தனர்.

அத்துடன் சோதனை கெடுபிடிகளில் ஈடுபடும் படையினர் அடையாள அட்டைகளை பறித்துச் செல்கின்றனர்.

இந்நிலைமைகளை தடுத்து நிறுத்தி இயலபான நிலையினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றேன் என்றுள்ளது.(க)

# இளைஞனின் சடலம் மட்டு.இல் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நாவற்கேணி தொடருந்துப் பாதை அருகில் நேற்று முன்தினம் மாலை துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இளைஞரொருவரின் சடலத்தை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

பொதுமக்களிமிருந்து கிடைத்த தகவலையடுத்து கண்டெடுக்கப்பட்ட இச்சடலம் ஆரையம்பதி கிழக்கைச் சேர்ந்த இராமன் இராஜன்(வயது 24) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதனிடையே மட்டக்களப்பில் தமது பணிகளை விலக்குவது குறித்து இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு ஆராய்ந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்காணிப்புக்குழு அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தினை தொடர்ந்து பணிகளை விலக்குவது குறநித்து கண்காணிப்புக்கழு ஆராய்ந்து வருவுதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

# சிறையில் விரிந்த மடல்கள் நூல் கனடாவில் வெளியீடு





(சென்னை)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலர் வை.கோபாலசாமி எழுதிய ‘சிறையில் விரிந்த மடல்கள்’நூல் நேற்றுமுன்தினம் கனடா நாட்டின் ரொறன்ரோ நகரில் நடைபெற்ற தமிழ்ப்புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் நிகழ்வின் போது வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் படைப்பாளிகள் கழகத்தினரால். கனடா முருகன் கோவில் விழா அரங்கில் தமிழ்ப் புத்தாண்டு விழா, மற்றும் பொங்கல் திருநாள் நிகழ்வு வெகு சிறப்பாக நடத்தப்பட்டது.

இதன்போதே வை.கோபாலசாமியின் ‘சிறையில் விரிந்த மடல்கள்’ நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சிறையில விரிந்தமடல்கள் நூலின் முதறபிரதியை பிரபல விற்பனை முகவரும் தமிழ் உணர்வாளருமான உதயன் பொன்னுத்துரைபெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வின் போது தமிழர் தேசிய இயக்கத்தின் சார்பில்பழ.நெடுமாறனை ஆசிரியராகக்கொண்டுதமிழகத்திலிருந்து வெளிவரும் தென்செய்தி இதழின் கனடியப் பதிப்பும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தென்செய்தி இதழின் முதற்பரதியை, மாவீரர் 2ஆம் லெப். மேகலாவின் தாயார் திருமதி பாலசுப்ரமணியம் வெளியிட்டு வைக்க, தமிழ் உணர்வாளரும், பிரபல வணிகருமான பாபு பெற்றுக்கொண்டார்.

ஆண்டுதோறும் தூய தமிழ்ப் பெயர்கள் இரண்டு, குடவோலை மூலம் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் 500 டொலர்கள் தமிழ்ப் படைப்பாளிகள் கழகத்தினரால் பரிசாக அளிக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்மொழியறிவுப் போட்டியில் முதலிடம் பெற்ற குழந்தைகளுக்கு தங்கப்பதக்கமும், பிற இடங்களைப் பெற்ற குழந்தைகளுக்கு, வெள்ளி, வெண்கலம் மற்றும் ஊக்குவிப்புப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (க)

# ‘மிக்’ விமானத் தாக்குதல் மூலம் புலிகளின் விமானத்தளத்தை அழிக்க முடியுமாம்

## விமானப்படை அதிகாரிகள் கருத்து

(கொழும்பு)

பாதுகாப்பு படையினர் மீது விமானத் தாக்குதல் நடத்த முடியும் என அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கேணல் பானு விடுத்த அச்சுறுத்தலையிட்டு இலங்கை விமானப்படைத்தரப்பு இதுவரையில் தெரிவிக்கும்தகவலுக்குஏற்பஎந்தவொரு தாக்குதலுக்கும் விமானப்படை தயாராக இருப்பதாக விமானப்படை உயர் அதிகாரிகள் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் இலங்கை விமானப்படையினர் இலங்கையின் வெவ்வேறு பிரதேசங்களிலும் நான்கு இடங்களில் ராடர் கண்காணிப்பு மற்றும் தாக்குதல் நிலையங்களை அமைத்துள்ளதாகவும் அந்த நிலையங்களில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பாரத் ராடர்கருவிகள் தாக்குதல்உபகரணங்கள் பொருத்தப்பட்டிருப்பதாகவும் அக்கருவிகள் மூலம் விமானம் ஒன்று தரையில் இருந்து ஆகாயத்தில் உயர எழுந்து செல்லும் முன்னரே கண்காணித்துத் தாக்குதலை நடத்த முடியும் என்றும் விமானப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கேணல் பானுவின் அச்சுறுத்தல் பற்றி விமானப்படையைச் சேர்ந்த சிரேஷ்ட விமானப்படை உத்தியோகத்தர்ஒருவர் தகவல் தெரிவிக்கையில்,

கேணல் பானு ஸ்வின் வகையைச் சேர்ந்த இரண்டு சிறிய விமானங்களை வைத் துக்கொண்டு விமானப்படையினரை அச்சுறுத்துவதாகவும இலங்கை விமானப்படையிடம் இருக்கும் ஒரு மிக் விமானத்தின் மூலம் ஒரே ஒரு தாக்குதலில் இரணைமடுவில் இருக்கும் புலிகளின் விமானத் தளத்தை முற்று முழுதாக அழிக்க முடியும் எனவும் கூறியுள்ளார். (க)

## அயர்லாந்து குடியரசின்

# மூத்த தலைவர் மார்டின் மக்கினஸ் இவ்வாரம் இலங்கை வருகிறார்

அயர்லாந்து குடியரசின் முக்கிய தலைவர்களில் ஒருவரும். ஐஆர்ஏ விடுதலை இயக்க மூத்த தலைவர்களில் ஒருவருமான மார்டின் மக்கினஸ் இவ்வாரததில் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அரசியல் பிரமுகர்களை சந்திக்கும் அதேவேளை கிளிநொச்சி சென்று தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

# தொலைத்தொடர்பு வசதிகளை பெற்றுத்தருமாறு கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டம் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவு கிராமங்களான வேரவில், கிராஞ்சி,வலைப்பாடு, பொம்மைவெளி, பிருந்தாவனப்பகுதி மக்கள் தொலைத்தொடர்பு வசதிகளைப் பெற்றுத்தருமாறு சம்பந்தப்பட்டோரிடம் கோரிககை விடுத்துள்ளனர்.அத்துடன் கிராஞ்சி-வலைப்பாடு வரையான வீதிகள் மோசமடைந்து இருப்பதாகவும் இதனை சீர்திருத்தம் செய்து தருமாறு சம்பந்தப்பட்ட திணைக்களத்திடம் கேட்டுள்ளனர்.

இக்கிராமத்தில் ஆயிரத்து 500குடும்பத்திற்கு மேற்பட்ட மக்கள் வசித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-102)

## இன்று ஒரு தகவல்

# கோபம்

"எனக்கு அவ்வப்போது கோபம் வருகிறது சார். அதற்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டார் ஒருவர். உங்களுக்கு அவ்வப்போது பைத்தியம் பிடிக்கிறது என்று அர்த்தம் என்று விளக்கம் கொடுத்தார் இன்னொருவர்.இது ஒரு சரியான விளக்கம் தான். ஏனென்றால் "கோபம் என்பது ஒரு தற்காலிக பைத்தியம் தான்"என்கிறார் ஒரு பெரியவர்.

தற்காலிகமாக ஒருவருக்குப் பிடிக்கின்ற பைத்தியம் தான் கோபம். அந்த சமயத்தில் அவர் மறைத்து வைத்திருக்கும் பைத்தியக்காரத்தனம் வெடித்துக் கொண்டு வெளியில் வருகிறது அவ்வளவுதான். இது மனிதனைச் சுருக்கும் சக்திகளைக் குறைக்கும் என்கிறார் அந்தப் பெரியவர். அவர் சொல்வது போல் பார்த்தால் நாம் எல்லோரும் தினமும் கொஞ்சநேரம் பைத்தியமாகிக் குணமாகிக் கொண்டிருக்கிறோம் என்று புரிகிறது.

இப்போது நாம் ஏதோ ஒரு விடயத்திற்காக ஒருவரிடம் கோபப்படுகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்களேன். கொஞ்சநேரத்தில் பழைய நிலைக்குத் திரும்பி விடுகிறோம். அப்போது சிலபேர் உண்மை நிலைமையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு மன்னிப்புக்கேட்டுக் கொள்ளும் பழக்கம் உண்டு. "நான் கோபப்பட்டு விட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்"என்று ஒருவர் சொல்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்களேன்.அவர் மனதிற்குள் புகுந்து அங்கே என்ன நடக்கிறது. அவர் ஏன் மன்னிப்பு கேட்கிறார் என்று ஆராய்ந்து பார்த்தால் தெரிய வருகின்ற விடயம் என்ன தெரியுமா? அவர் அப்படி மன்னிப்பு கேட்பது வெறும் நடிப்பு என்பது தெரியவருகிறது. அவரைப் பற்றி நாம் மட்டமாக நினைத்து விடுவோமாம். அவர் மேன்மையானவர் என்பதை நம்மிடம் காட்டிக்கொள்வதற்காகவே அவர் அப்படிச் செய்கிறார்.

நாமும் அப்படித்தான்! நாம் யார் மீதாவது கோபப்பட்டு விட்டு கொஞ்சநேரம் கழித்து அவரிடமே மன்னிப்பு கேட்கிறோம் என்றால் என்ன அர்த்தம்? அந்த ஆள் நம்மை ஒரு குரங்கு என்று நினைத்துவிடக்கூடாது என்று நமது உள்மனம் நினைக்கிறது. அதன் வெளிப்பாடுதான் மன்னிப்பு கேட்பது. சரி கோபத்தை வெல்வதற்கு ஏதாவது வழி உண்டா என்று கேட்டால் அதற்கும் அந்தப் பெரியவர் வழிசொல்கிறார். மனதைப் பற்றிய சில உண்மைகளைப் புரிந்துகொண்டால் கோபத்தை வென்றுவிடலாம் என்கிறார் அவர். உங்கள் மனம் இருக்கிறதே அது ஒரு முனைப் பட்டது.

அதாவது... ஒரே சமயத்தில் இரண்டு விடயங்களைப் பற்றி அதனால் நினைக்கமுடியாது. ஒரு எண்ணத்திலிருந்து இன்னொரு எண்ணத்திற்கு வேகமாக மாறக்கூடிய சக்தி மனதிற்கு உண்டு. ஆனால் ஒரு சமயத்தில் ஒரு எண்ணத்தைத்தான் மனதால் நினைக்கமுடியும். கோபம் வரும்போது நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள்.ஐந்து தடவை உங்கள் மூச்சை ஆழமாக உள்ளே இழுத்து மெதுவாக, மெல்ல வெளியே விடுங்கள்.

அப்போது என்ன ஆகும் என்றால்... மனதில் கோபத்திற்குப் பதிலாக சுவாசம் பற்றிய சிந்தனை ஏறும். இந்த சுவாசத்திற்குப் பின்பு மனதில் மறுபடியும் கோபம் தோன்றினாலும் கூட அது தீவிரமாக இருக்காது. அது தீவிரம் ஆன கணம் கடந்துவிட்டது. அதனால் பழைய அளவுக்கு ஆத்திரம் இருக்காது. இதுபோல மனதில் கோபத்தை நோக்கிப் பாயும் சக்தியை திருப்பி விட்டு விட்டால் கோபத்தை இன்னொருவர் மீது பிரயோகிக்க வேண்டிய அவசியம் இருக்காது. இதைத் தொடர்ந்து செய்து கொண்டுவந்தால்... கோபம் யார் மீதும் வராத அளவுக்கு அது ஒரு பழக்கமாகவே ஆகிவிடும். இதுதான் அந்தப் பெரியவர் சொல்லும் வழி.

இந்த வழியை ஒரு குடும்பத் தலைவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் சொன்னார் "ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் கோபத்தைச் சமாளிக்கிறார்கள் சார்... நான் எனக்கென்று ஒரு வழி வைத்திருக்கிறேன்" என்றார். "அது எப்படி? "என்றேன் ஆச்சரியமாக."என் மனைவிக்கு திடீர் திடீரென்று பயங்கரமாகக் கோபம் வரும் சார். கோபம் வந்துவிட்டால் கையில் கிடைக்கும் பாத்திரத்தையெல்லாம் எடுத்து என் முகத்திற்கு நேராக வீசுவது உண்டு சார்" என்றார்.

"அதை எப்படி சமாளித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்."அது ஒன்றும் கஷ்டமில்லை சார். ஒரு தலையணையை எடுத்து என் முகத்திற்கு நேராகப் பிடித்துக் கொள்வேன் அவ்வளவுதான்"என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தேசியத் தலைவரின் காலத்திலேயே தமிழினம் விடுதலை பெறவேண்டும்

(கிளிநொச்சி)



அடிமைகளாக அலைந்து திரிந்த தமிழினம், தமீழத் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் தான் தலைநிமிர்ந்துள்ளது என்று தமிழீழ நிதித் துறைப் பொறுப்பாளர் செ.வ.தமிழேந்தி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தைத்திருநாள் பெருவிழாவில் சிறப்புரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், தமிழீழ தேசியத்தலைவரின் தலைமையில் அவரின் வழிகாட்டலில் தான் தமிழினம் வீரஞ் செறிந்த இனமாக தலைநிமிர்ந்துள்ளது. அடிமைகளாக அலைந்து திரிந்த தமிழினம் தேசியத் தலைவர் அவர்களின் காலத்தில் தலைநிமிர்ந்துள்ளது.

தைத்திருநாள் பெருவிழா தமிழினத்தின் பண்பாட்டின் அடையாளம்.தமிழ் மக்களுக்கு இருக்கின்ற திருநாட்கள் இரண்டு தைப்பொங்கலும்,ஆடிப்பிறப்பும் தான் தமிழரின் திருநாட்கள்.இவை தமிழரின வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டது.

நீண்டகாலமாக பல்வேறு வழிகளிலும் அடிமைப்பட்டுள்ள தமிழினம் எமது தேசியத் தலைவர் அவர்களின் காலத்திலேயே விடுதலை பெறவேண்டும் என்றார். (த)

# ஒற்றையாட்சி முறையில் அதிகாரப் பகிர்வு குறித்து ஆராய்வதற்கு விசேட சபை

## அமைக்கக் கோருகிறது ஜாதிக ஹெல உறுமய

(கொழும்பு)

ஒற்றையாட்சி முறைக்குள் அதிகாரத்தைப் பகிரும் விசேட திட்டங்களை வடிவமைப்பதற்காக அரசியல் நிபுணர்கள்,கல்விமான்களைக் கொண்ட சபையொன்றை விரைவில் நியமிக்க வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் யோசனையொன்றை முன்வைத்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த யோசனை முனவைக்கப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய சார்பில் அதன் தலைவர் எல்லாவல மோதானந்த தேரர், தவிசாளர் கொட்டபொல அமரகீர்த்தி தேரர்,பாராளுமன்ற குழுத் தலைவர் அத்துரலியே ரத்ன தேரர்,கொள்கை வகுப்பாளர் பாட்லி சம்பக்க ரணவக்க, ஊடக இணைப்பாளர் நிசாந்த வனசிங்க ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்த விசேட திட்டத்தினை வடிவமைக்கையில் இந்தியா உட்பட ஏனைய வெளிநாடுகளின் அரசியலமைப்பையும் ஆராய வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நடைபெறவிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள மற்றும் யுத்த நிறுத்த உடன்படிக்கை மீளாய்வு என்பன குறித்தும் இங்கு பேசப்பட்டுள்ளது. சமாதான செயற்பாடுகளில் பங்குகொண்டுள்ளவர்களினதும் கருத்துக்களையறிந்து யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருக்கும் சில அத்தியாயங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மஹிந்த ராஜபக்ஷ இச்சந்திப்பின் போது உறுதியளித்துள்ளார். நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்பு பாதிக்கப்படும் வகையிலான பல விடயங்கள் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருப்பதாக மஹிந்த இதன்போது ஏற்றுக்கொண்டுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் நாடு தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டுள்ளன.


ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்திராத நாடொன்றிலேயே இந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய யோசனை முன்வைத்துள்ளது.

இந்த யோசனையை ஏற்றுள்ள மஹிந்த, ஜப்பான் அல்லது தென் ஆபிரிக்காவில் பேச்சுவார்த்தைகளை நடத்துவது சம்பந்தமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நோர்வே ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்காத போதிலும் அந்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு சாதகமான நிலை நிலவுவதால் அங்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளக் கூடாதென்பது ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாடாகும்.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தொடர்பாக சிங்கள மக்களுக்கு இருக்கும் உரிமை தொடர்பாகவும் இந்நாட்டில் நிலவும் பயங்கரவாதப் பிரச்சினை பற்றிய உண்மை நிலையை வெளிநாடுகளுக்கு தெரியப்படுத்துவதற்காகவும் வெளிநாட்டமைச்சுடன் இணைந்து விசேட செயற் பிரிவொன்றை அமைப்பது சம்பந்தமாகவும் இங்கு ஆராயப்பட்டுள்ளது. (த-4)

# புலிகளின் விசேடபயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற தைப்பொங்கல் கொண்டாட்டம்











உழவர் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 6.00மணி தொடக்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பல படைகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான போராளிகள் ஒன்றுகூடி தைத்திருநாளை மகிழ்ச்சிகரமாக கொண்டாடினார்கள்.

சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த மித்திரன் தலைமையில் மாதிரியான வடிமைக்கப்பட்ட தமிழீழத்தின் மாவட்டங்களின் பிரதேசங்களில் பல பொங்கல் பானைகளை வைத்து பொங்கி தமிழீழத்தின் தலைநகரான திருகோணமலையில் ஏற்பட்ட தேசியக்கொடியின் முன்னால் பொங்கலைப் படைத்து தைத்திருநாளைக் கொண்டாடினர்.தமிழீழத் தேசியக்கொடியினை படைப்பயிற்சி ஆசிரியர்களின் ஒருங்கிணைப்பாளர் லெப் கேணல வீரப்பன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து அகவணக்கம் உறுதி உரைநடைபெற்றன. சாள்ஸ் அன்ரனி விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாலவன் சிறப்புரையினை நிகழ்த்தினார். (த-4)

# ஏமாற்றிவிட்ட 2005

## ஒக்ரோபர்

01.10.2005 *சந்திரிகா பிரான்ஸிற்குப் பயணம்.



06.10.2005 *நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் சு.ப தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.





* யாழ்.பல்கலைக்கழகத்தின் 24 வது பட்டமளிப்பு விழா.



10.10.2005 *உலக உணவுத் திட்ட ரோம் தலைமை யகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் போல்ஸ் கைற்றி கிறிஸ் நோபசன் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.

11.10.2005 *வவுணதீவில் புலிகளின் வாகனத் தொடரணி மீதான தாக்குதல் முயற்சி முறியடிப்பு.

*கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் சிவகடாட்சம் சுட்டுக்கொலை.

## வலம்புரி நினைவுக் குறிப்பு

*யுனிசெப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி வெங்கர் பென்ஜே அனா அம்மையார் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.

12.10.2005 *யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை சுட்டுக் கொலை.

13.10.2005 *சந்திரிகா குமாரதுங்க லண்டன் பயணம்.

*சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவர் இயன் மார்ட்டீன் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.




16.10.2005 *மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.

19.10.2005 *இராணுவத்தினரின் ஆளில்லா வேவு விமானம் புலிகளின் பகுதியில் வீழ்ந்தது.

*தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைச் செயலகம் திருகோணமலையில் திறப்பு.

*யாழ்.அதிபர்களின் கொலையைக் கண்டித்து பல் கலைக்கழக மாணவர் ஒன்றியம் நோர்வேத் தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம்.





22.10.2005 *திருகோணமலையில் தமிழ்த்தேசிய எழுச் சிப் பிரகடன நிகழ்வு.



24.10.2005 *பெல்ஜியத்தில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி.

27.10.2005 *வவுனியாவில் தமிழ்த்தேசிய எழுச்சி மாநாடு.

28.10.2005 *புத்தூரில் யுவதி ஒருவர் மீது இராணுவச் சிப்பாய் பாலியல் வல்லுறவு முயற்சி. மக்கள் எதிர்ப்பு ஆர்ப் பாட்டம். இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி. 10 இற்கும் அதிகமானோர் காயம்.

30.10.2005 *புத்தூர் சம்பவத்தைக் கண்டித்து யாழ் குடாநாட்டிலும் வவுனியாவிலும் துக்கதினம் அனுஷ்ட்டிப்பு.

## உலக அரங்கில்

01.10.2005 *பாலித்தீவில் தொடர் குண்டு வெடிப்பு. 38 பேர் பலி. 180 பேர் காயம்.

04.10.2005 *சீன நிலக்கரி சுரங்கத்தீவில் வெடி விபத்து. 34 பேர் பலி. 120பேர் காயம்.

*இந்தியவெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங் இஸ்லாமாபாத்தில் பிரதமர் சௌகத் அஜீஸுடன் சந்திப்பு.

05.10.2005 *பக்தாத் மசூதியில் குண்டுவெடிப்பு. 30 பேர் பலி. 135 பேர் காயம்.



08.10.2005 *பாக் - இந்திய எல்லையில் பூகம்பம். 86 ஆயிரம் பேர் பலி.

24.10.2005 *அமெரிக்காவின் சிவில் உரிமைப் போராட்ட முன்னோடி ரோசா பார்க் காலமானார்.

*தமிழ் நாட்டில் பெரு வெள்ளம். 60 பேர் பலி.

28.10.2005 *ஆந்திராவில் ஆற்றுக்குள் ரயில் கவிழ்ந்து 260 பேர் பலி.

29.10.2005 *புதுடில்லியில் தொடர் குண்டு வெடிப்பு. 245 இற்கும் அதிகமானோர் பலி.

31.10.2005 *தென்னிந்தியத் திரைப்படப் பாடகி பி.லீலா மரணம்.

(தொடரும்...)

---

### 6 விடுதலைப்புலிகள் சுட்டுக்கொலை

## சிங்கள ஊடகங்களில் வெளியான செய்திக்கு அரசியல் துறையினர் மறுப்பு

அம்பாறை மாவட்ட கஞ்சிக்குடியாற்றுப் பகுதியில் இராணுவத்தினரும் சில தமிழ் குழுவினரும் இணைந்து ஆறு தமிழீழ விடுதலைப் புலிகளை சுட்டுக் கொலை செய் துள்ளதாக சிங்கள ஊடகங்களில் வெளி யான செய்தியை அம்பாறை மாவட்ட அரசி யல்துறையினர் மறுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்ட அரசியல் துறையி னர் இது தொடர்பாக அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளனர். அந்த அறிக்கையில் இரா ணுவத்தினரும் அவர்களுடன் சேர்ந்தியங் கும் தேசவிரோத தமிழ் குழுக்களும் தமிழ் மக் களை திசை திரும்பும் வகையில் பல தரப்பட்ட பொய் யான வதந்திகளைப் பரப்பி மக்களைத் துன்புறுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இந்த வகையில்தான் அண்மையில் சிங்கள ஊடகம் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆறு பேரை கொன்றுள்ளதாக செய்தி வெளி யிட்டிருந்தது. இது முற்று முழுதாக பொய் யான வதந்தியாகும்.

இச் செய்தியை உருவாக்குவதற்காக தேச விரோதக் குழுவினர் அம்பாறை மாதோட்டம் என்ற இடத்தில் அமைந்திருக்கும் விசேட அதிரடிப்படையினரின் முகாமிலிருந்து சாகா மம் என்ற இடத்தில் மாடு மேய்த்துக் கொண்டி ருந்த இளைஞர்களை அடித்துத் தாக்கிய தோடு அவர்களைத் துன்புறுத்தினார்கள்.

பின்பு அவர்கள் அக்கரைப்பற்றுக் கிரா மத்தில் அமைந்திருக்கும் இராணுவ முகா மிற்கு சென்றுள்ளார்கள். இதிலிருந்து தெளி வாகின்றது. பொய்யான வதந்திகளைப் பரப்பு வதோடு தமிழ் மக்களையும் துன்புறுத்தி வருகின்றார்கள் என்றுள்ளது. (ஈ)

## சித்தன்கேணியில் தொடர்ந்தும் பதற்றம்

தற்போது நிலவும் அசாதாரண நிலைமை காரணமாக சங்கானை சித்தன்கேணிப் பகுதியில் மாலை 6.30 மணியுடன் வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டு வீதிகளும் வெறிச் சோடிக் காணப்படுகின்றதாக தெரி விக்கப்படுகின்றது.

அவசர அத்தியாவசிய தேவைகளுக் காக் கூட தாம் வெளியே செல்ல முடியாது உள்ளதாக தெரிவிக்கின்றனர். (க)

## புளியங்கூடலில் முன்பள்ளி

நிக்கோட் உதவித்திட்டத்தின் கீழ் 7 இலட்சம் ரூபா செலவில் புளியங்கூடலில் முன்பள்ளி அமைக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் கே.சிறிமோகன் தெரிவித்துள்ளார். (க)

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## கடமையைச் செய்

ஆக்ராவின் புறநகர்ப் பகுதியில் எண்பது வயதிலும் உழைத்துச் சாப்பிடுவதில் உறுதியாய் இருந்தார் அந்த முதியவர்.

ஒருமுறை அவர் தனது தோட்டத்தில் மரக்கன்றுகளை நட்டுக்கொண்டிருந்தார். அப்போது அவ்வழியே போன மக்கள், கிழவருக்கு ஆசையைப் பார் மரக்கன்று நடுகிறார். அது காய்க்கும் வரையில் உயிருடன் இருப்பாரோ என்னவோ மாம்பழ ஆசையில் கன்றுகளை நட்டுக்கிறார் என்று கேலியாகப் பேசினர்.

ஆனால் அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் கிழவர் தன்வேலையைச்செய்து கொண்டிருந்தார்.

அப்போது அப்பக்கமாக ஏதோ வேலையாக வந்த முகலாய மன்னர் பாபர் மக்களின் பேச்சையும் கிழவரின் வேலையையும் கவனித்து விட்டுத் தன் குதிரையை நிறுத்தினார்.

மக்களின் பேச்சை அலட்சியப்படுத்திவிட்டு, வேலையைக் கவனிக்கிறீர்களே... மரம் பழுக்கும் வரை உயிர் வாழ முடியும் என நம்புகிறீர்களா? என்று கேட்டார்.


அரசே என் முன்னோர்கள் நட்ட மரங்களில் பழுத்த பழங்களை நான் சாப்பிடவில்லையா? அதுபோல் எனக்குப் பின் வரும் தலைமுறையினர் பழங்கள் சாப்பிட வேண்டாமா? அதற்காகவே நான் மரக்கன்றுகளைநட்டுக்கொண்டிருக்கிறேன் என்றார்.

இதைக்கேட்டு மகிழ்ந்த பாபர், அய்யா நீங்கள் வரும் தலைமுறை மீது 'கொண்டுள்ளஅக்கறைமகிழ்ச்சிஅளிக்கிறது என்று சொல்லி ஒரு பண முடிப்பைப் பரிசாக வழங்கினார்.

பணமுடிப்பைப் பெற்றுக் கொண்ட கிழவர் அரசே மரம் நட்டவர்கள் எல்லாரும் மரம் வளர்ந்த பின்பே பலன் அடைவார்கள்... நானோ கன்று நட்ட உடனே பலன் பெற்று விட்டேன் என்றார். அதைக் கேட்டு மகிழ்ந்த பாபர் மேலும் ஒரு பணமுடிப்பை அளித்தார்.

அதைப் பெற்றுக்கொண்ட கிழவர் அரசே மரங்கள் நட்டவர்கள் எல்லாம் ஆண்டுக்கு ஒருமுறையே பலன் அடைவர். நானோ நட்ட அன்றே இருமுறை பலன் பெற்று விட்டேன் என்றார்.

## பலனை எதிர்பாராதே



கிழவரின் சாதுர்யமான பேச்சில் உள்ள கருத்தை உணர்ந்த பாபர் மேலும் மகிழ்ந்து இன்னொரு பண முடிப்பையும் கொடுத்தார்.

கிழவர் சிரித்துக்கொண்டே பார்த்தீர்களா? மன்னா இந்த மரம் வளர்ந்து பலன் தரும் வரை வாழ்வானா இந்தக் கிழவன் என மக்கள் கேலி செய்தனர். நீங்கள் கூட அப்படித் தான் கேட்டீர்கள். ஆனால் பாருங்கள் நான் இப்போதே அதன் பலனை எவ்வளவு சந்தோஷமாக அனுபவிக்கிறேன்.

எல்லோரும் இதைச் செய்தால் என்ன கிடைக்கும் அதைச் செய்தால் என்ன கிடைக்கும் என எதிர்பார்த்துக் காரியம் செய்கிறார்கள்.

ஆனால் பலனை எதிர்பார்க்காதே கடமையைச் செய் என்று தான் முன்னோர்கள் சொல்கின்றனர்.

நான் கடமையைச் செய்தேன். எதிர்பாராத அளவு பலன் கிடைத்திருக்கிறது. இது கேலி பேசும் முட்டாள்களுக்குத் தெரியாது என்று சொன்னார் கிழவர்.

## ஈ.வெ.ராமசாமிப் பெரியார்

(1979–1973)



தமிழகத்தில் சமூதாயச் சீர்கேடுகளையும் மூட நம்பிக்கைகளையும் ஒழிப்பதற்காகப் பாடுபட்ட தலைவர் ஈ.வெ. ராமசாமிப் பெரியார். இவரை மக்கள் தந்தை என்றும் பெரியார் என்றும் அன்புடன் அழைத்து வந்தனர்.

பெரியார் மாவட்டத்திலுள்ள ஈரோட்டில் 1879 செப்டெம்பர் 17ஆம் நாள் பெரியார் ஈ.வெ.ரா. பிறந்தார். பள்ளிப்படிப்பு இவரைக் கவரவில்லை. பத்தாம் வ்யதில் படிப்பை விடுத்து தம் தந்தை நடத்திவந்த வாணிகத்தில் ஈடுபட்டார். 19ஆம் வயதில் நாகம்மை என்பவரை மணந்து கொண்டார்.

வாணிகத்தைக் கவனித்துக்கொண்டே இவர்அரசியலிலும் ஈடுபட்டார். 1919இல் இவர் ஈரோடு நகராட்சித் தலைவரானார். அச்சமயம் காந்தியடிகளின் தலைமையில் இந்திய தேசியக் காங்கிஸ் நடத்திவந்த விடுதலைப் போராட்டம் இவரைக் கவர்ந்தது. 1920இல் இவர் காங்கிரஸில் சேர்ந்து மதுவிலக்குப் போராட்டம், தீண்டாமை ஒழிப்புப் போராட்டம், ஒத்துழையாமை இயக் கம், கதர் இயக்கம் முதலியவற்றில் தீவிரப் பங்குகொண்டு பலமுறை சிறைசென்றார். கேரளத்திலுள்ள வைக்கம் என்ற ஊரில் அறப்போர் நடத்தி அரிசனங்களுக்குக் கோயில் வழிபாட்டு உரிமை கிடைப்பதற்கு வழி செய்தார். இதனால், வைக்கம் வீரர் என்று புகழ் பெற்றார்.

தமிழ்நாடு காங்கிரஸின் தலைவராகவும் செயலாளராகவும் பணியாற்றிய இவர் கருத்துவேறுபாடு காரணமாக 1925இல் காங்கிரஸிலிருந்து விலகினார். 1926இல் சுய மரியாதை இயக்கத்தைத் தொடங்கி சமூகச் சீர்கேடுகளை எதிர்த்துப் பிரசாரம் செய்யலானார். 1929இல் மலேயாவுக்கும், 1931இல் பல ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று வந்தார்.

1938இல் இவர் நீதிக் கட்சியின் (Justisce Party) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் நீதிக் கட்சியையும் இயக்கத்தையும் இணைத்துத் திராவிடர் கழகம் என்ற கட்சியைத் தோற்றுவித்தார். இக்கட்சியின் சார்பில் சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் பலவற்றை நடத்தினார். 1938இல் தமிழகப் பள்ளிகளில் இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்கியதை எதிர்த்து நடந்த கிளர்ச்சி யில் முக்கிய பங்குகொண்டார்.


இவருடைய மனைவி நாகம்மை 1933இல் காலமானார். இவர் 1949இல் இரண்டாம் திருமணம் செய்துகொண்டார். பொருளற்ற மதச் சடங்குகளை இவர் வன்மையாகக் கண்டித்தார். நாட்டில் சாதி வேற்றுமை ஒழிய இவர் அயராது உழைத்தார்.

பெரியார் பாமர மக்களின் உள்ளத்தைக் கவரும் வகையில் பேசும் ஆற்றல் வாய்ந்தவர். எழுதவும் வல்லவர். ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்காகவும் சமூகச் சீர்திருத்தத்திற்காகவும் அரை நூற்றாண்டுக்கு மேல் அஞ்சா நெஞ்சத்தோடு பாடுபட்டு வந்த பெரியார் 1973 டிசம்பர் 24ஆம் நாள் தம் 94ஆம் வயதில் காலமானார்.

## கண்டுபிடியுங்கள்

அன்புக் குழந்தைகளே!

கீழேயுள்ள இரண்டு படங்களுக்குமிடையே குறைந்த பட்சம் 7 வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்?



சிறுவர் பாதுகாப்பு இலங்கை
யாழ்ப்பாணம்

விடைகள
கண்டுபிடியுங்கள்
1.பழக்கூடை 2.பை 3.பேனா
4.நாட்காட்டி 5.மின்விளக்கு
6.ஜன்னல் 7.தலைப்பின்னல்

## பிக்மி என்பவர்கள் யார்?



ஆதி மனித வாழ்விலிருந்து மாறாது இன்றும் ஆபிரிக்காவில் மக்கள் நடமாட்டமில்லாத அடர்ந்த மத்திய காடுகளில் வாழும் ஒரு மீற்றர் உயரமேயுள்ள மனிதர்கள் பிக்மி எனும் இனமாகும். இவர்கள் சுமார் நூறுபேர் கொண்ட குழுவாக வாழ்கின்றனர்.

இவர்களின் தொழிலும் பொழுதுபோக்கும் வேட்டையாடுவதே. வில், அம்பு, வலை போன்ற கருவிகளில் நிபுணத்துவம் பெற்றவராக உள்ளனர். வழக்கமாக தேன் எடுப்பது உண்டு. இவர்கள் நிலையாக ஒரேயிடத்தில் வாழாமல் உணவு தேவை கருதி கிடைக்கும் இடத்திற்கு குடியிருப்பை மாற்றிக் கொள்கின்றனர்.

தற்போது நாகரிக வாழ்விற்கு மாறி வருகின்றனர். பிக்மிகளின் வேறொரு பிரிவான பூட்டி டுவா, பிக்மிகள் காங்கோ போன்ற நகரங்களில் வாழ்கின்றனர். மிக்மிஸ்சின் ஆயுதம் வின்ட்பைப். இதில் ஒரு வகை கொடிய விஷத்தை சிறு ஊசி போன்ற மரக்குச்சிகளில் தடவி மூங்கில் குழாய் மூலம் வாயில் ஊதி விலங்குகளைக் கொன்று வேட்டையாடுகின்றனர். 40 வருடங்களுக்கு முன் ஆங்கில நாவல்களிலும் சினிமாவிலும் இந்த வின்ட்பைப் உத்தி பற்றி வெளி வந்து உலகப் புகழ் பெற்றது!

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

## அனைவரும் அறிந்து வைத்திருக்க வேண்டிய

**சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989 நவம்பர் 20ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

## சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்

7 *(சென்றவாரத் தொடர்ச்சி....)*

3. 15 வயதை அடையாத எவரையும் தமது படைகளிற் சேர்த்துக் கொள்வதை அரச தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும். படைக்கு ஆள் திரட்டும் போது பதினைந்து வயதை அடைந்தும் பதினெட்டு வயதை அடையாதிருப்போர் மத்தியிலே வயது கூடியவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க முயலுதல் வேண்டும். (தயவு செய்து இக் கைநூலின் இறுதிப்பகுதியிலுள்ள ஆயுதப் பிணக்குகளில் சம்பந்தப்பட்ட பிள்ளைகள் தொடர்பான சமவாயத்தின் பூர்வாங்க விருப்பு ஆவணத்தை வாசிக்கவும்)

4. ஆயுதப் போராட்டங்களின் போது, குடிமக்களைப் பாதுகாத்தல் வேண்டுமென்னும் சர்வதேச மனிதாபிமானச்



சட்டத்தின் கடப்பாடுகளுக்கு அமைய, ஆயுதப் போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளைக் காத்துப் பராமரிப்பதற்கு ஏற்ற நடவடிக்கை அனைத்தையும் அரச தரப்பினர் மேற்கொள்ள வேண்டும்.

**உறுப்புரை 39**

எந்த வகையான புறக்கணிப்பு, சுரண்டல் அல்லது இம்சை, சித்திரவதை அல்லது குரூரமான, மிருகத்தனமான கண்டிப்பு அல்லது தண்டனைகளால் பாதிக்கப்பட்ட பிள்ளையும் அதே போன்று ஆயுதப் பிணக்குகள் எவற்றினாலேனும் பாதிக்கப்பட்ட பிள்ளையும், உடலாலும் உள்ளத்தாலும் குணமடைந்து சமூகத்தில் மீளவும் இணைந்து கொள்ளச் செய்வதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் அரச தரப்பினர் மேற்கொள்ள வேண்டும். இங்ஙனம் குணமடைதலும், சமூகத்தில் மீளச் சேர்தலும் பிள்ளையின் ஆரோக்கியம், சுய கௌரவம், கண்ணியம் ஆகியவற்றைப் பேணுகின்ற சூழலில் அமைதல் வேண்டும்.

**உறுப்புரை 40**

1. தண்டனைச் சட்டத்தை மீறிய பழிக்காளான ஒவ்வொரு பிள்ளையையும் அதன் கண்ணியத்தையும், மதிப்பையும் மேம்படுத்துவதற்கு உகந்த முறையிலே மனித உரிமைகளுக்கும் பிறரின் அடிப்படைச் சுதந்திரங்களுக்கும் பிள்ளை கொடுக்கும் மதிப்பை வலுப்படுத்தக் கூடியதாக, பிள்ளையின் வயது, சமுதாயத்தில் அது மீண்டும் இணைவதன் ஏற்புடையமையை மற்றும் சமுதாயத்தில் அது ஆக்கபூர்வமாக ஆற்றக்கூடிய பணி ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு நடத்தப்படல் வேண்டும்.

2. இதன் பொருட்டும், சர்வதேச சாசனங்களின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டும் அரச தரப்பினர் பின்வருவனவற்றைக் குறிப்பாக உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(அ) எந்தச் செயலும் அது புரியப்பட்ட வேளையில், தேசிய அல்லது சர்வதேச சட்டத்தின்படிதடுக்கப்படாதிருந்தால், அச் செயலைப் புரிந்த அல்லது புரியாது விட்ட காரணத்தால் தண்டனைச் சட்டத்தை மீறியதாக எந்தப் பிள்ளை மீதும் பழி சுமத்தக் கூடாது.

(ஆ) தண்டனைச் சட்டத்தை மீறியதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும் பின்வரும் குறைந்தபட்ச உத்தரவாதங்களாவது உள்ளன:

(i) குற்றம் சட்டப்படி நிரூபிக்கப்படும் வரை சுத்தவாளியாகக் கருதப்படல் வேண்டும்.

(ii) குற்றச்சாட்டுகள் எவை என உடனடியாகவும் நேரடியாகவும் அறிவிக்கப்படல் வேண்டும். மேலும் பொருத்தமாயின் பெற்றோர் அல்லது சட்டப்படியான பாதுகாவலருக்கு அறிவிக்க வேண்டும். அத்துடன் பிள்ளை சார்பான வாதத்தைத் தயாரித்துச் சமர்ப்பிக்கத் தேவையான சட்டவாரியான அல்லது பிற பொருத்தமான உதவி கிடைக்கவும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(iii)பிள்ளையின் வயது அல்லது நிலைமை, பெற்றோர் அல்லது சட்டப்படியான பாதுகாவலர் ஆகியோரை விசேடமாகக் கவனத்திற் கொண்டு, பிள்ளையின் நன்மைக்கு ஏற்றதல்ல எனக் கருதும் பட்சத்திலன்றி, மற்றும்படி, சட்டப்படியான அல்லது வேறு பொருத்தமான உதவியாளரின் முன்னிலையில் தகுதி வாய்ந்த, சுதந்திரமான, பாரபட்சமற்ற அதிகார சபையோ குழுவோ சட்டப்பிரகாரம் தீர விசாரித்து தாமதமின்றித் தீர்ப்பளித்தல் வேண்டும்.

(iv) சாட்சியம் அளிக்கவோ குற்றத்தை ஒப்புக் கொள்ளவோ நிர்ப்பந்திக்கப்படலாகாது. சமத்துவமான நிலைமைகளில் பாதகமான சாட்சியங்களை விசாரணை செய்யவும் அல்லது விசாரணை செய்விக்கவும் சாதகமான சாட்சியங்கள் பங்கு கொள்ளவும் விசாரணைக்கு உட்படுத்தப்படவும் இடமளிக்கப்படல் வேண்டும்.

(V)தண்டனைச் சட்டத்தை மீறியதாகக் கருதும் டட்சத்தில் அந்த முடிவையும் அதன் விளைவாக விதிக்கப்படும் தண்டனையையும்சட்டப்படிதகுதிவாய்ந்த, சுதந்திரமான, பாரபட்சமற்ற அதிகார சபை அல்லது நீதித்துறைக் குழுவின் மீளாய்வுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) விசாரணையில் உபயோகிக்கப்படும் மொழியைப் பிள்ளை விளங்கிக் கொள்ளவோ, பேசவோ இயலாதிருக்கும் பட்சத்தில், மொழிபெயர்பாளரின் உதவியை இலவசமாகக் கொடுத்துதவ வேண்டும்.

(vii)விசாரணையின் சகல கட்டங்களிலும் பிள்ளையின் அந்தரங்கம் பூரணமாகப் பேணப்படல் வேண்டும்.

3. தண்டனைச் சட்டத்தை மீறிய பழிக்குள்ளாகும் பிள்ளைகளுக்கு விசேடமாகப் பொருந்தக்கூடியவாறான சட்டங்கள் நடைமுறைகள், அதிகாரசபைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் தாபிதத்தை ஊக்குவிப்பதற்கு அரச தரப்பினர் முயலுதல் வேண்டும். அத்துடன்,

(அ) இன்ன வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் தண்டனைச் சட்த்தை மீறும் ஆற்றல் அற்றவர்கள் எனக் கருதக்கூடியவாறாக, குறைந்தபட்ச வயதெல்லை ஒன்றினை நிர்ணயிக்கவும்.

(ஆ) இத்தகைய சிறுவர், சிறுமியர் விடயத்தில் மனித உரிமைகளும் சட்டப் பாதுகாப்புகளும் முழுமையாகக் கௌரவிக்கப்படும் பட்சத்தில் நீதித்துறை நடைமுறைகளை விடுத்து பொருத்தமான வேறு நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவும் முயலுதல் வேண்டும்.

4. சிறுவர், சிறுமியரின் சேமநலனுக்கு இசைவாகவும் சூழ்நிலை குற்றம் ஆகியவற்றின் தாற்பரியத்துக்கு ஏற்றவாறும் அவர்கள் நடத்தப்படுவதை நிச்சயம் செய்யும் பொருட்டு, தாபன வாரியான பராமரிப்பு நிலையங்களுக்குப் பதிலாக பல்வேறு வகைப்பட்ட கவனிப்பு, வழிகாட்டல், கண்காணிப்பு, உத்தரவுகள், ஆலோசனைகள் வழங்கல், சுவீகாரகரப் பராமரிப்பு, கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்கள் போன்ற வசதிகள் கிடைக்கச் செய்தல் வேண்டும்.



**உறுப்புரை 41**

இந்தச் சமவாயத்திலுள்ள எதுவும்,
(அ) அரசதரப்பினரின் சட்டத்திலோ,
(ஆ) அந்த நாட்டில் நடைமுறையிலுள்ள சர்வதேச சட்டத்திலோ அடங்கியிருக்கக்கூடியனவும் பிள்ளையின் உரிமைகளை நிலை நாட்டுதற்கு அதிக வாய்ப்பானவையுமாகிய எந்த ஏற்பாடுகளையும் பாதித்தலாகாது.

### பாகம் 2

**உறுப்புரை 42**

சமவாயத்தின் கோட்பாடுகளையும், ஏற்பாடுகளையும் வயது வந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் ஒருங்கே பரப்புதற்குத் தகுந்த மார்க்கங்களை அரச தரப்பினர் மேற்கொள்ள வேண்டும்.

**உறுப்புரை 43**

1. இந்த சமவாயத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் காணப்படும் முன்னேற்றத்தை ஆராயும் பொருட்டு சிறுவர் உரிமைகள் தொடர்பான செயற்குழு ஒன்றினை அரச தரப்பினர் அமைத்தல் வேண்டும். இந்தச் செயற்குழு கீழ்க் காணும் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

2. மேற்படி செயற்குழுவில் இந்தச் சமவாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் விடயங்களில் திறமை வாய்ந்தவர்களென அங்கீகரிப்பட்டவர்களும் ஒழுக்க சாலிகளுமாகிய 10 நிபுணர்கள் இடம் பெறல் வேண்டும். செயற்குழுவின் உறுப்பினர்களை அரசதரப்பினர் தமது சொந்தக் குடிமக்களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்கள் உத்தியோகப் பற்றற்ற தனிப்பட்ட முறையில் செயற்பட வேண்டும். தெரிவு செய்யும் விடயத்தில் பூகோள வாரியான பகிர்வும் பிரமானமான சட்ட அமைப்புகளும் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

(தொடரும்)

**அன்பார்ந்த மாணவர்களே!**

உங்கள் வலம்புரியில் திங்கட் கிழமை தோறும் வெளிவரும் 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' பகுதியை தவறாது வாசியுங்கள். வெகு மதியான பரிசில்களுடன் உங்களுக்கான போட்டிகள் காத்திருக்கின்றன.

**சிறுவர் பாதுகாப்பு இலங்கை**
**யாழ்ப்பாணம்**

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?

## பன்னிரு இராசிகளுக்கும் ஆகஸ்ட் மாதத்துக்குரிய பலன்கள்

(தொடர்ச்சி....)

| | | | |
|---|---|---|---|
| ரா | | | சு |
| | ஆகஸ்ட் ராசி நிலை | | சூ பு சனி |
| | | | செ |
| | | குரு | கே சந் |

### மேடம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1)

நீங்கள் எதிலும் சற்று விட்டுக்கொடுத்துத் தான் போகவேண்டும். அயல்நாட்டுத் தொடர்பு உடையவர்கள் இனிமையான தகவலைப் பெறுவர். எதிர்பார்த்த விஷயத்தைவிட மேன்மை மிக்கதாகவே இருக்கும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு மாதம் பிற்பகுதி மனதிற்கிசைந்த காரியங்கள் சில கைகூடி வந்துவிடும். போட்டி, பந்தயம், விளையாட்டும் வெற்றிக்கு திருப்பு முனையாக அமைந்துவிடும். உங்கள் பொன்னான நேரத்தை வீணாக்காமல் செயல்பட வேண்டிய மாதமிது. சிலசமயம் நீங்கள் ஆரம்பத்தில் முறைக்கு வர சற்று தாமதமாகும் சொத்து விற்பது அல்லது மாற்றி அமைப்பது உண்டாகும். சகோதர, சகோதரி வகையில் முக்கிய செலவுகள் இடம்பெறும். குடும்ப வகையில் அணிகலன் வகைக்கு செலவு செய்யவேண்டி இருக்கும். சிலர் குடி இருப்பு இடம் மாற்றுவது, புது குடிபுகுவது, கட்ட வேலை முடிப்பது போன்ற சுப செலவுகளும் திருமணச் செலவுகளும் இடம்மாறும் காலம். ஸ்தல பிரயாணம் மேற்கொள்வது தெய்வ வழிபாடும் உண்டாகும். உத்தியோகப் பிரிவினர்களுக்கு இடம்மாற்றம் அல்லது இலாகா மாற்றமும் முக்கிய அம்சமாக இருக்கும். மலைவளம் சூழ்பிரதேச பிரயாணம், ஸ்தல பிரயாணம், தெய்வ தரிசனம் போன்ற நிகழ்ச்சிகள் இருக்கும். இக்காலம் பெண்கள் மூலம் சில நன்மைகளையும் எதிர்பார்க்கலாம். கணவன், மனைவி உறவில் நீங்கள் கண்ணியத்தை எதிர்பார்க்கமுடியாது. தூரத்துச் செய்தி சலனமாக இருக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்கள் உடன் இருப்பவர்களை சரிகட்டிப் போவதுதான் சிறப்பு. தேக சுகவீனம் கை காலில் காயப்படுவதால் சிகிச்சை முதலானவையும் தேவைப்படும். குடும்ப சொத்து வகையில் சகோதர மனபேதம் எழுவதும் குறிப்பிடத்தக்கது. நடுப்பகுதிக்கு மேல் உடல் ஆரோக்கியம் திருப்தியளிப்பதாக இருக்கிறது. கணவன், மனைவி உறவில் கவர்ச்சிகரமான போக்கு, குடும்பத்திற்கு புத்தாடை சித்தி, புதிய ஆபரணம் வாங்குவது உண்டாகும். இந்த ராசி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உயர்வு திருப்தியளிப்பதாக இருக்கிறது. பெண்களுக்கு கணிசமான அளவு தொழில் வெற்றியும் ஆதாயமும் இருக்கிறது. அயல்நாட்டு கடிதத் தொடர்பில் முன்னேற்றமான போக்கும் உருவாகும். எதிர்பார்க்காத சில காரியங்கள் வந்து முளைக்கும். அலுவலகத்தில் எழுத்து வகையில் பதில் கூறவேண்டிய நிர்ப்பந்தமும் உண்டாகும். இப்போது சிறு பிரச்சினையும் கூட பெரிதாக ஆகிவிடலாம். சேமிப்பில் இருந்த பணம் செலவாகும். பண வரவு இருந்தாலும் பற்றாக்குறை கூடவே இருக்கிறது. இப்போது உங்கள் சொந்தச் செலவும் குடும்பச் செலவுங்கூட இரண்டுமே அதிகம்தான். பிரயாண அனுகூலங்கள் இருக்கின்றன. மறைந்திருந்த விஷயங்கள் சில வெளியாவது உங்களுக்கு அனுகூலமாக இருக்கும். இந்த ராசியை உடையவர்கள் திருமணம் ஏற்பதும், காதலர் குடும்ப வாழ்க்கையும் மகிழ்ச்சிக்குரியதாக அமையும்.

### ரிஷபம்
(2,3,4 கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2)

புதியதாக எந்தவித தீமையும் அருகில் வராது என்றாலும், பழைய விஷயங்கள் சில புதிய பிரச்சினையை எழுப்பக்கூடியதாக இருக்கும் நன்மைகள் இருக்கின்றன. வழக்கு வேகமும் குறைந்துவிடும். காதல், கல்யாண சூழ்நிலையை உருவாக்கும். புதுமனை புகுதல், கட்டட சேர்க்கையும் சிலருக்கு குறிப்பிடத்தக்க நன்மைகளாகும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு புதிய தொழில் வழி ஆதாயங்களும் இப்போது இருக்கின்றன. கணவன், மனைவி உறவில் இன்பகரமான சூழ்நிலை நிலவி வரும். மாணவ, மாணவிகளுக்கும் கல்வியில் சிறப்புத்தன்மை இருக்கிறது. உங்களுக்கு கிரகங்களின் சாதகமான போக்கு தெளிவான வழியில் செல்லுவார்கள் என்று காட்டுகிறது. தூரத்து தேச பிரயாணத்தையும் உண்டாக்கும். குடும்ப வகையில் சுப செலவகளும் பசிய உறவ சேர்ப்பதும் குறிப்பாக நன்மைகளாகும். தொழில் மந்தம் என்பதும் இல்லை. வேலையாட்கள் நல்ல போக்கில் இயக்கம் கொள்வதால் தனநிலை உயர்வைப் பெறுவீர். இப்போது தைரிய உயர்வும் இருக்கும். கடன் சம்பந்தமான பிரச்சினைகள் முன்பு இருந்தது. இப்போது கட்டுக்கடங்கி வந்து விட்டன. பெருமைப் பேச்சுக்கள் அதிகமாக இருக்கும். தனித்து இயங்குவதை விட்டு கூட்டு முயற்சி கணிசமான நன்மை தரும் என நம்பலாம். உங்கள் செயல் முறைகள் மற்றவர்களால் பாராட்டப்படும். பணம் கொடுக்கல், வாங்கல் உங்கள் பகைவர்களையே திகைக்கவைத்துவிடும். கடன் இருக்க மேலும் கடன் பெறவேண்டிய அவசியமும் உண்டாகும். குடும்பத் தேவைகளும் குறித்தபடி பூர்த்தியாக்கப்படும். வழக்கும் பாதிக்க வாய்ப்பில்லை. சிலர் தொழில் சம்பந்தமான இயந்திரம் வாங்குவது, கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்வதும் உண்டாகும். மேலும் அயல்தேச பிரயாணமுங் கூட கூடிவரும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு மேல்நிலை மனிதர்கள் மூலம் சிலவகை எழுத்து நன்மைகளை செய்வதும் விளையாட்டு போன்ற வகையில் மிதமான ஆதாயமும் இருக்கின்றன. ஆண், பெண்களுக்கு மனம் நிறைந்து காணப்படும். புத்திரர், புத்திரியர்கள் தேக ஆரோக்கியம், கல்வி உயர்வும் குறிப்பிடத்தக்கது. இம்மாதம் புண்ணியஸ்தல பிரயாணம் மேற்கொள்ள வேண்டி இருக்கும். உத்தியோகப் பிரிவினர்களுக்கு கடந்த காலமே உயர்வான பலன்கள் ஆரம்பித்துவிட்டன என்றாலும் இந்த மாதமும் இலாகாவில் திருப்தியான மாற்றங்களைச் செய்யக் கூடும். உங்கள் விருப்பத்தை இப்போது முழுமையாக செயற்படுத்த முடியாது.

### மிதுனம்
(மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 )

ஆரோக்கியம், கல்வியும் கவர்ச்சிகரமாக இருக்கின்றன. முன்னைவிட இப்போது நீங்கள் ஒரு சீரான தொழில் போக்கு உடையவர்கள். தன நிலையில் திருப்தியான போக்கு இருக்கும். தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகிக்கொண்டே வரும். நண்பருக்கு உபகாரம் செய்யவேண்டியவர்கள் நீங்கள். பூமி,வீடு போன்ற வழிகளிலும் தன ஆதாயத்தைப் பெறுவீர்கள். மலைப்பிரதேச தனபுண்ணிய ஸ்தல யாத்திரை தொடரும். வழக்கு இருப்பவர்களுக்கு முடிவு தள்ளிப்போய்விடும். கீழ்நிலை ஊழியர்கள் தொடர்பு, காதல், கல்யாண சம்பந்தமான கடிதத் தொடர்புகளுக்கு ஏற்ற காலமிது. உறவினர்கள் மூலம் உருவான சிக்கல் வளர்ந்துகொண்டே வரும். உடல் நலத்தில் அக்கறை காட்டவேண்டும். செய்தொழில் வகையில் உழைக்கும் உழைப்புக்குத் தக்க பலன் கிட்டுவது கடினம். வியாபாரிகள் இதை உத்தேசித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சிலருக்கு திடீரென பணம் சற்று தாமதமானாலும் வந்துவிடும். சிலருக்கு தொழில் வேகம் உள்ள காலம் இது. தூரத்துப் பிரயாணம் கட்டாயமாக இருக்கலாம். பகைப்பட்ட மனிதர்களும், அதிபர்களும் உங்களைச் சந்திக்க வேண்டிய அவசியம். அவசரத்தை புதனும், சுக்கிரனும் உண்டாக்கி விடுவர். நீச தொழில் உள்ள இதர பிரிவினருக்கு தன ஆதாயமும் மற்றும் சில எதிர்பார்ாத வழி தன உதவியும் கிடைக்கப்பெறும். குடும்ப பாதிப்பு உச்சம் பெற்று தனித்து நின்றாலும் மறைந்து இருப்பதால் இல்லறத்தில் பெண் பிரிவினர் கைகளே ஓங்கி இருக்கும். சிலவகையில் அவர்கள் பிடிவாத நிலையை மாற்றவும் முடியாது. இதனால் குடும்பத்தில் குழப்பநிலை உருவாகி மறையவும் கூடும். கலைப்பிரிவினர்கள் கண்ணியத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். கூட்டு முயற்சியும் பலன் தரும் அளவுக்கு உருவாக்கப்பட்டுவிடும். உங்கள் சத்ருக்கள் இப்போது பலம் குன்றியவர்களாக ஆகுவர். வழக்கு பயம் வேண்டாம். வார்த்தையை குறித்தபடி காப்பாற்றிவிடவும் முடியும். வேண்டாதவர்களில் சிலரையும் இப்போது சந்திக்கவேண்டிய அவசியம் உண்டாகும். முற்பகுதி தனவரவு உண்டு. வெளிவட்டாரத்தினர் உதவியாக இருப்பதுபோல் உறவு வழி இல்லை. சலன நிலையும் உண்டாக்கும். கலைப்பிரிவு எழுத்தாளர்கள் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பாராட்டுக்கள் பெறும். மாணவ மாணவிகளுக்கு கல்வித்தரம் உயர்வு, உறவினர், நண்பர்களாலும் பராட்டுப் பெறும். நல்ல கனவுகள் தோன்றும். தொழில் சம்பந்தமான வகையில் இருந்துவந்த வழக்கு இதர சிக்கல்களையும் ஒரு நல்ல முடிவுக்கு கொண்டுவரும் காலம் இது. கிரகங்களுக்கு சாரபலம் உங்களுக்கு அனுகூலமாக இருப்பதால் நீங்கள் நினைப்பதையே அவர்களுக்கு செலவுகள் இருப்பதை உணர வேண்டும். ஒன்றுக்கு குறிப்பிட்டு வைத்திருக்கும் பணம் வேறு ஒன்றுக்கு செலவழிக்க வேண்டி இருக்கும். இப்போதுவிபக்து இல்லை. பாகிப்பகளும் குறைவுதான். பழைய நண்பர்கள் சிலர் இப்போது பக்க பலமாக இருப்பர். தொழில் ஒரே சீராக இருக்கும்.

### கடகம்
(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

அரசியல் அரசாங்க வகை பெரிய மனிதர்கள் முக்கியஸ்தர்கள் உங்கள் பெரும் முயற்சிக்கு ஊக்கம் அளிப்பவர்களாக இருப்பர். இதனால் தன நடமாட்டம் தேவைக்குத் தக்கபடி உடனுக்குடன் பூர்த்தியாகும். தொழில் சம்பந்தமான பெரிய மனிதர்களுடன் சேர்ந்து விருந்துண்பதும் உண்டாகும். வாகன தொழில் சம்பந்தமான பெரிய கணிசமான ஆதாயம் இருக்கும். குழந்தைகள் வகை கல்வி மேன்மை கருத்தைக் கவருவதாக இருக்கும். தூரதேசப் பிரயாணமும் கூட திடீரென்று உண்டாகும். வேலையாட்கள் இப்போது அமைப்பாக வந்துவிடுவர். வெளியூர் வெளிநாட்டுத் தொடர்புகள்தான் இருக்கும். குடும்பத்தில் பெண்கள் வகைக்கு மருத்துவ செலவுகள் இடம்பெறுவது தவிர்க்கமுடியாது. பழைய கடன் வகை ஒரு பகுதி பளு குறைக்கப்படும். பெண்கள் கலைப்பிரிவு மனிதர்களால் உதவி பெறுவதும் உண்டாகும். மேலும் சில தொழில் வகைக்கு வேண்டிய இயந்திரக் கருவி, வாகனம் போன்றவைகளை வாங்குவதும் உண்டாகும். வருவாய் அதிகரித்து இருப்பதால் கடன் ஒரு சுமையாய் இருக்காது. குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான போக்கு உதயமாகி இருக்கும். உடன் பிறப்பு வகைக்கு சுபச்செலவு செய்வதுங்கூட இருக்கும். அரசியல் மனிதர்கள் மூலம் எதிர்பார்த்த அவசர உதவியை அரசாங்க உயர்மட்ட அதிகாரிகள் மூலமே முடிக்கப்பெறும். வெளியூர் அல்லது வெளிநாட்டுப் பிரயாணமும் இப்போது உங்களுக்கு கடுமையாக இருக்கும். எழுத்து மூலம் எதிர்பார்க்கும் அரசாங்க உத்தரவு தொழில் வகைக்கு திருப்தியாக வரவில்லை. சற்றுக் காலதாமதமாகும். உங்கள் கணக்குகளைக் கவனமாகப் பார்க்கவேண்டும். கூட்டுத் தொழில் உள்ளவர்களுக்கு பாகஸ்தர்கள் இடையில் பிணக்கு உண்டாக வாய்ப்பு இருக்கிறது. வழக்கு தேவையில்லை. வாய்ப்பேச்சில் நிகழக்கூடியது தான். இந்த சூழ்நிலை உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு மாத ஆரம்பத்தில் உயர்வான போக்கு உடனிருப்பவர்களால் உபகாரங்களும் தொடர்ந்து இருக்கும். உடன் இருந்தவர்கள் பிரிவுங்கூட அவசியமாகத்தான் இருக்கும். பிரயாணம் மேற்கொண்டது திருப்தி இல்லாதது. கடமைகளைச் செய்ய தடைகள் இருக்கின்றன. கவனமறதி மனதை ஒருநிலைப்படுத்த முடியாமை என்பது அதிகமாக இருக்கிறது. இதனால் உரிய காலத்தில் உரியதைச் செய்யமுடியாது. எழுத்து, ஒப்பந்தம் போன்றவைகளும் காண்ட்ராக்ட் தொழில் உள்ளவர்களுக்கு சிக்கலாகவே இருக்கும். கணவன் -மனைவி உறவு கைகொடுக்கும். உங்கள் செயலுக்கு உடனிருக்கும் தொழில் கூட்டாளிகள் இயக்கம் திருப்தியாக இருக்கும். புதிய ஒப்பந்தம் செய்வது, கலைப்பிரிவு மனிதர்களின் தொடர்பைப் பெறுவது போன்ற நன்மைகளும் இருக்கத்தான் செய்யும். சீர் இயந்திரம் வாகனம் வாங்குவது போன்ற நன்மைகளைப் பெறுவர். அலைச்சல் பிரயாணமும் கூடுதலாக இருக்கலாம். ஆனால் வரவு செய்வதில் குறைவு இல்லை. இப்பொழுது கௌரவச் செலவுகள் அதிகமாக இருக்கும்.

### சிங்கம்
(மகம், பூரம், உத்தரம் 1)

கொடுக்கல், வாங்கல் திருப்தியாக இருக்கிறது. குடும்பம் உறவினர் வழியைவிட வெளிவட்டாரம் சிறப்பு மிக்கது. சிலசமயம் சுகம் அனுபவிப்பதும் வெளியில் இருக்கும் புதிய நண்பர்கள் சிலரை சேர்க்கவேண்டிய காலமிது. போட்டி, பந்தயம், விளையாட்டு, விருந்துகொள்வது போன்ற நன்மைகள் இருக்கின்றன. காதல், கல்யாண சம்பந்தமான கடிதத் தொடர்புக்கு ஏற்ற காலமிது. குடும்பத்தில் திருப்தியான போக்கு இல்லை. சிலவகையில் உங்களுக்கு கூட்டு முயற்சி நன்மை தரும். வழக்கு அப்படியே நிற்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இடமாறுதல் ஏற்படலாம். சொன்ன சொல்லைக் காப்பாற்றி எல்லோருடைய நன்மதிப்பையும் பெறுவீர்கள். மருத்துவச் செலவு அத்தனையும் இருக்கிறது. கவனமறதி அதிகமாகும். தூக்கம் குறைவு. துர்சொப்பனம் காணுவதும் குறிப்பிடத்தக்கது. தொழில் வழியில் கவனிக்க முடியாத சூழ்நிலை இருந்துகொண்டே இருக்கிறது. குடும்பத்தில் பற்றாக்குறை விடவில்லை. குறையாக விட்ட வேலைகளைப் பூர்த்தி செய்யவும் இடம் தராது. வேலையாட்கள் வகையில் நீங்கள் முழு ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது. உடன் இருந்தவர்களே உங்களுக்கு எதிராக நடப்பதும் குறிப்பிடத்தக்கது. செய்தொழிலில் சில பெண்கள் குறுக்கீட்டால் குதர்க்கநிலை ஏற்படலாம். எச்சரிக்கை தேவை. முடிவு எடுப்பது உங்களின் எண்ணப்படியே இருப்பது நல்லது. மேலும் வீடு, மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் பிரச்சினைகள் ஏற்படலாம். முடிவில் இவர்களுக்கு வெற்றியே. உங்கள் சொல்லுக்கு மதிப்பு உள்ள காலம். கணக்குகளை அதிகமாக கவனிக்க வேண்டிய காலம். கணவன், மனைவி உறவு இனிமையாக இருக்கும். மூன்றாவது மனிதர்கள் தலையிட்டு செயல்படும் காரியங்கள் பாராட்டத்தக்கதாக இருக்கும். பழைய நண்பர்கள், உறவினர்களின் சந்திப்பு புதிய முயற்சிக்கும் வழிகோலும். தேக ஆரோக்கியம் தெளிவடைந்து ஜலப்பிரதேச மனிதர்கள் கடிதப் போக்குவரத்து காலக்கெடுவு உடையதாகவே இருக்கின்றன. குடும்பத்தில் மனை வாங்குவது அல்லது கட்டுவது சம்பந்தமானது காலத்தே முடியவில்லை. ஒப்பந்தம் தொழில் உள்ளவர்கள் அரசாங்கம் இதர மனிதர்களிடம் பகை நேராமல் பார்த்துக்கொள்வது அவசியம். பிரயாணம் உங்கள் திட்டம், பிரச்சினைகளுக்கு முடிவு உண்டாக்கும். மேலும் சகோதர வகையில் மனிதனின் மனபேதமும் இருக்கத்தான் செய்யும். பிரயாணம், உறவினர் இல்லாமல் விருந்து உண்பது போன்றவையும் இருக்கின்றன. சுபவிஷயம இல்லத்தில் திருப்தியாக இருந்தாலும் முடிந்து வருவது தாமதப்படுகின்றன. புத்திரியர்கள் வகையிலும் கவனம் செலுத்தவேண்டும். விபத்து, அடிபடுதல் போன்றவைகள் அவர்களுக்கு நிகழத்தக்கவை.

### கன்னி
2,3,4, அத்தம், சித்திரை 1,2 )

குடும்பத்தில் உள்ள குரு வக்ரம் என்றாலும் சுக்ரன் இருப்பதால் உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு ஆரோக்கியப் பாதிப்பும், அலுவலக வேலைகளை கவனிக்க முடியாமல் இருக்கும். இதனால் மேல்நிலை கீழ் மனிதர்களிடமும் சீற்றம் இருக்கும். இவை படிப்படியே அதிகமாகுமே ஒழிய குறைய மார்க்கமில்லை. மாணவ, மாணவியர்கள் கவனித்துப் படிக்கவேண்டும். பிரயாணம் இருக்கிறது. அரசியல்வாதிகள் முக்கிய மனிதர்களை சந்திப்பது, எழுத்து மூலம் சில நன்மைகளைப் பெறுவதும் குறிப்பிடத்தக்கது. நீங்கள் இப்போது தேகசுகத்தில்தான் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். மற்றபடி பணம் கொடுக்கல் வாங்கல், தொழில் முயற்சி இவைகள் அனுகூலமாக இருக்கின்றன. உங்கள் அவசர கால வேலைகள் உடனுக்குடன் பூர்த்தியாகிக் கொண்டே வரும். குடும்பத்தில் மனபேதப்பட்ட உறவினர்களுக்கு சமாதானம் கூறுவது அவர்கள் மூலம் சுபபேச்சுக்களை நல்முடிவுக்குக் கொண்டு வருவதும் இருக்கும். பெண்கள் கலைப்பிரிவு வேலைகள் மனிதர்கள் மூலம் சிலவகை ஆதாயம் உண்டாகும். தொழில் வழியில் குறுக்கீடு இருந்த போதிலும் தொடர்ச்சியாக சில நன்மைகளும் ஆதாயமும் இருக்கவே செய்கின்றன. கடன் விஷயத்திலும் சற்றுக் கவனம் செலுத்துவது அவசியம். மற்றவரால் பாராட்டையும் பெறுவீர்கள். மனத் தெளிவோடு இயக்கம் கொள்ளும் காலமிது. எப்போதோ எதிர்பார்த்த கடன் இந்த இரவு நேரத்தில் வந்து சேருவது தொழில் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும். உறவினர் வருகை செலவினைக் கொடுக்கும். தூரத்துக் கடிதம் சுப விஷயம் தாங்கியும் வரும். வாகனம் செலவு, வழக்கு செலவு போன்றவைகள் இருக்கும். பிரயாணம் சுகம் குறைவுதான். நீங்கள் இந்த மாதம் கடன்பட்டாவது கௌரவச் செலவு கூடியவர்கள். கணவன், மனைவி உறவு பூசல் உடையதுதான். காத்திருந்த காரியங்கள் சில கடைசி நேரத்தில் தடைப்பட்டு போவது குறிப்பிடத்தக்கது. பின் தொடர்ந்து நன்மைகளும் விடாது. கொடுக்கல், வாங்கலில் புதிய திருப்பத்தை உண்டாக்கும். சனி அதைரியத்தைத்தான் உண்டாக்குமே தவிர பாதிப்பு கொடுக்க இப்போது காலமில்லை. வீடு, பூமி போன்ற பொருளை விற்பதால் தன ஆதாயம் உண்டாகும். லாபத்தை ஒரு வழியில் குறைத்துக்கொண்டே இருப்பான் என்பதால் அதைக் கவனிக்கவும். கணக்கு பார்க்கும்போது குறைவுகள் தெரியும். உத்தியோக மேலிடத்து கடித அனுகூலம் உண்டு. குடும்பத்திற்கு புதிய ஆடை அணிகலன்கள் சேர்க்கையும் உண்டாகும். புத்திரர்கள் கல்வி இனி நன்றாக இருக்கும். அவசர பிரச்சினைகள் அடியோடு மறந்து தன்னம்பிக்கையின் எல்லைக்கு இப்போது வந்துவிடுவீர்கள். கலைத்துறையினர் அரசியல்வாதிகளுக்கு கௌரவப் பதவி அல்லது கௌரவ உயர்வு உண்டாகும். கணவன், மனைவி உறவு மாதம் முதலில் இருப்பதைவிட இப்போது இனிமையாக இருக்கும். நல்ல நண்பர்களைப் பெறுவதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

(தொடரும்...)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

20 மின்பார்வை


உத்தமன் படத்தில்...(1976)

இதுபோன்று நாடகங்கள் நடித்துக் கொண்டிருக்கும் போதுதான் மிகக் கஷ்டமான ஒரு நிலைமை ஏற்பட்டது. கஷ்டம் என்றால் மிகவும் கஷ்டம். அந்த நேரத்தில்தான், லட்சுமிகாந்தன் என்பவரை யாரோ கொலைசெய்துவிட்டார்கள். அப்பொழுது உயர்திரு ராஜாஜி அவர்கள் முதல் மந்திரியாக இருந்த காலகட்டம் என்று நினைக்கிறேன்.

லட்சுமிகாந்தன் இறந்ததற்கு என்ன காரணம்? என்று ஒன்றும் தெரியவில்லை. ஆனால்'லட்சுமி காந்தனைக் கொலை செய்வதற்கு சதி செய்தார்கள்'என்பதுபோல் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டது. உண்மை எதுவென்று தெரியாது. இதனால் ஸ்ரீராமுலு நாயுடு, எம்.கே.தியாகராஜபாகவதர், என்.எஸ். கிருஷ்ணன் ஆகியோர் மீது சந்தேகப்பட்டு கைதுசெய்து வழக்கு நடத்தி தண்டனையும் கொடுத்துவிட்டார்கள். அப்பொழுது எத்திராஜ் என்றொரு பெரிய வக்கீல் இருந்தார். அவரும் பெரும் தலைவர்கள் பலரும் இவர்கள் விடுதலைக்காக வாதாடினார்கள். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.எம்.கே.டி அவர்களையும், என். எஸ்.கே அவர்களையும் அந்தமான் சிறைக்கு அனுப்பிவிட்டார்கள். அதன்பிறகு என்.எஸ்.கே. நாடகக் கம்பெனியை யார் நடத்துவது? என்ற பிரச்சினை வந்தது. கம்பெனியில் எஸ். வி.சகஸ்ரநாமம், கே.ஆர்.ராமசாமி ஆகிய இருவர் இருந்தனர். இரண்டு பேருமே பெரிய நடிகர்கள். கம்பெனியில் சமமானவர்கள். எனவே யாரிடம் இந்த நாடகக் கம்பெனியை ஒப்படைப்பது? என்ற பிரச்சினை ஏற்பட்டது. உடனே என்.எஸ்.கேயின் மனைவியார் திருமதி மதுரம் அவர்கள் நாடகக் கம்பெனியை சகஸ்ரநாமத்திடம் ஒப்படைத்தார்கள். என்.எஸ்.கே நாடக மன்றத்தில் கே.ஆர்.ராமசாமியும் முக்கியமானவரல்லவா? எனவே தன்னிடம் அக் கம்பெனியை ஒப்படைக்கவில்லையென்று அவருக்கும் சகஸ்ரநாமத்திற்கும் அபிப்பிராய பேதம் வந்தது. கம்பெனி இரண்டாகப் பிரிந்தது. நானும் வேறு சிலரும் கே.ஆர்.ராமசாமிப் பக்கம் வந்துவிட்டோம்.சில பேர் சகஸ்ரநாம பக்கம் சென்றார்கள்.


பேரறிஞர் அண்ணாவுடன்...

கே.ஆர். ராமசாமி ஒரு தனி நாடகக் கம்பனி ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எங்கள்எல்லோரையும் அழைத்துக் கொண்டு, காஞ்சிபுரம் சென்றார். நாங்கள் அனைவரும் பேரறிஞர் அண்ணாவின் திராவிட நாடு அலுவலகத்தில் தங்கினோம். அப்பொழுது திராவிட நாடு என்றொரு பத்திரிகையை அண்ணா அவர்கள் நடத்தி வந்தார்கள். ஈழத்தடிகள் என்று ஒரு சீர்திருத்த சாமியார் இருந்தார். அவர்கள் சொந்த ஊர் சிலோன். அவர்தான் அந்தப் பத்திரிகையின் பொறுப்பை ஏற்று நடத்திக் கொண்டிருந்தார்.

### சிவாஜி கணேசனானேன்...

டி.எஸ்.என் : அண்ணாவோடு திராவிட நாடு அதில் இருந்த போது எத்தகைய அனுபவம் கிடைத்தது?

சிவாஜி:அப்பொழுது திராவிடக் கழகம் மிக மும்மரமாக வளர்ச்சியடைந்துகொண்டிருந்த காலம். அது 1946ஆம் ஆண்டு. சென்னையில் 7வது சுயமரியாதை மகாநாடு நடப்பதற்காக ஏற்பாடு நடந்துகொண்டிருக்கிறது. அதற்காக அண்ணா அவர்கள் சிவாஜி கண்ட இந்துராஜ்யம் என்றொரு நாடகம் எழுதினார். முன்பெல்லாம் திராவிட நாடு அலுவலகத்தில் நாங்கள் இருக்கும்போது சாப்பிட்டுவிட்டு சும்மா இருக்கவில்லை. அப்பொழுது பிரிண்டிங் பிரஸ்ஸை கையால்தான் சுற்றவேண்டும். நாங்கள் பிரிண்டிங் மிசினை சுற்றுவோம் அச்சுக்கோர்த்தலில் எழுத்துக்கோர்ப்பதற்கு உதவிசெய்வோம்.

அண்ணா அவர்களிடம் பெரிய சிறப்பு என்னவென்றால் பேனாவை பேப்பரில் வைத்தால் அந்தப் பக்கம் முடியும் வரையில் எடுக்கவேமாட்டார்கள். எழுதி எழுதி போட்டுக் கொண்டே இருப்பார்கள். நான் அருகில் உட்காந்துகொண்டு ஒவ்வொன்றாக அவற்றையெல்லாம் பக்கம் போட்டு அடுக்கிக்கொடுப்பேன்.

அந்த சமயத்தில் தான் சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம் நாடகத்தை அண்ணா அவர்கள் எழுதினார். அதில் எம்.ஜி.ஆர். அவர்கள் சிவாஜி கேரக்டரை நடிப்பதாக இருந்தது. அவருக்காக உடையெல்லாம் தைத்தார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை அந்த நாடகத்தில் எம்.ஜி.ஆர் . நடிக்க முடியாது என்று கூறிவிட்டார்.


திருவள்ளுவராக...

-நாடகம் நடப்பதற்கு ஒ ரு வாரம் தான் இருந்தது. டி.வி.நாராயணசாமி அவர்கள் நாடகப் பொறுப்பேற்றிருந்ததன் காரணமாக மிகவும் கவலைப்பட்டார். (தொடரும்)

# சிறுவர்களுக்கான கலைப்பயில் களம்

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களின் கலை ஆற்றலை மேம்படுத்தும் நோக்குடன் செயல் திறன் அரங்க இயக்கத்தினால் சிறுவர்களுக்கான கலைப்பயில் களம் ஒன்று 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செயல்திறன் அரங்க இயக்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள நுண்கலைப் பயிற்சிப் பயிலகத்தில் 8 வயது தொடக்கம் 12 வயது வரை உள்ள சிறுவர்கள் கலந்துகொள்ளலாம்.

இப் பயிற்சியில் நாடகம், மிருதங்கம் ,நடனம், வாய்ப்பாட்டு, பாரம்பரியக் கூத்துக்கள், வயலின் வகுப்புக்கள் நடைபெறும். வட இலங்கை சங்கீதசபைப் பரீட்சைக்குத் தோற்றக்கூடியதாக இப் பயிற்சிகள் வழங்கப்படும்.

நுண்கலை வகுப்புகள் யாவும் சனி,ஞாயிறு மற்றும் கிழமை நாட்களில் (மாலை நேரம்) அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள செயல்திறன் அரங்க இயக்கத்தில் நடைபெறும்.

விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதனால் பயிற்சிபெற விரும்புபவர்கள் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன் பதிவுகளை செயல்திறன் அரங்க இயக்க நிறுவனத்தில் மேற்கொள்ளவும். (க-19)

# நாடக அரங்கப் பயிற்சிகள் அடுத்த மாதம்ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

நாடகத்தை ஒரு பாடமாக பயிலும் மாணவர்களது நன்மை கருதி செயல்திறன் அரங்க இயக்கம் அரங்க வள நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இப்பயிற்சி வள நிலையத்தில் நாடக அரங்கப் பயிற்சிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப் பயிற்சியானது க.பொ.த சாதாரண மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சி, க.பொ.த. உயர்ந்தர மாணவர்களுக்கான நாடக அரங்கப்பயிற்சி என இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

க.பொ.த. சாதாரண மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சியை தொடர விரும்புபவர்கள் க.பொ.த. சாதாரண தரத்தில் நாடகத்தை ஒரு பாடமாகப் பயிலுதல் வேண்டும்.

இதேபோன்று க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சியைத் தொடர விரும்புபவர்கள் உயர்தரத்தில் நாடகத்தை ஒரு பாடமாகப் பயிலுதல் வேண்டும்.

இவ் இரு பயிற்சிகளும் பாடத் திட்டத்தின் செயல் முறைச் செயற்பாட்டின் அடிப்படையில் அமையும்.

பயிற்சிகள் சனி, ஞாயிறு தினங்களிலும், கிழமை நாட்களில் மாலை நேரத்தில் அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள செயல்திறன் அரங்க அலுவலகத்தில் நடைபெறும். பயிற்சிபெற விரும்புவர்கள் 30.01.2006றக்கு முன் செயல்திறன் அரங்க இயக்க நிறுவன அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.(க-19)


நாடக அரங்கியல் மாணவர்களுக்கு
செயல் முறைப் பயிற்சிகள்
PRACTICAL TRAINING FOR THE STUDENTS OF DRAMA &THEATRE

செயல் திறன் அரங்க இயக்கம் 2006 ஆம் ஆண்டு தைமாதம் தொடக்கம் அரங்க வள நிலையம் ஒன்றை ஆரம்பித்து இயங்கி வருகின்றது. இவ் வள நிலையத்தில் O/L , A/L மாணவர்களுக்கான நாடக அரங்க பயிற்சிகள் (செயல்முறை பாடத்திட்டத்திற்கு அமைவாக) ஆரம்பமாகவுள்ளன.

பயிற்சியில் பங்கு பற்ற விரும்புவர்கள் தங்கள் பெயர்களை 30.01.2006 ற்கு முன் எமது நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளலாம். சனி. ஞாயிறு மற்றும் கிழமை நாட்களில் (மாலை நேரம்) வகுப்புக்கள் நடைபெறும். (விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டது)

*பயிற்சி நடைபெறும் இடம்,தொடர் முகவரி*

செயல்திறன் அரங்க இயக்கம்
ACTIVE THEATRE MOVEMENT
அருளகம், ஆடியபாதம் வீதி. திருநெல்வேலி.



சிறுவர் கலைப்பயில் களம்
CHILDRENS FINE ARTS TRAINING CENTRE

செயல் திறன் அரங்க இயக்கம் 2006 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் சிறுவர்களுக்கான நுண்கலைப் பயிற்சிக் களம் ஒன்றை ஆரம்பித்து இயக்கி வருகின்றது.

இப் பயில் களத்தில் தமது கலையாற்றலை மேம்படுத்த விரும்பும் சிறுவர்கள் பங்கு கொண்டு பயிற்சிகளைப் பெறலாம். வட இலங்கை சங்கீத சபை பரீட்சைக்கு தோற்றக் கூடியதாக பயிற்சிகள் வழங்கப்படும்.

*பயிற்சிகளின் விபரம்*

1. நாடகம்
2. மிருதங்கம்
3. நடனம்
4. வாய்ப்பாட்டு
5. பாரம்பரிய கூத்துக்கள்
6. வயலின்



பயிற்சியில் பங்குபற்ற விரும்பும் சிறுவர்கள் 30.01.2006 ற்கு முன் எமது நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளலாம். சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாட்களில் (மாலை நேரம்) வகுப்புக்கள் நடைபெறும்.


*பயிற்சிகள் நடைபெறும் இடம்/தொடர் முகவரி*

செயல்திறன் அரங்க இயக்கம்
ACTIVE THEATRE MOVEMENT
அருளகம், ஆடியபாதம் வீதி. திருநெல்வேலி.

# சதாம் வழக்கை விசாரிக்கும் நீதிபதி பதவி விலக முடிவு?

(பக்தாத்)

ஈராக்கில் சதாம் உசேன் மீதான வழக்கு



களை விசாரித்து வரும் நீதிபதி பதவி விலக முடிவு செய்துள்ளார். ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன் மீது ஏராளமான வழக்குகள் உள்ளன. தற்போது சிறையில் உள்ள சதாம் மற்றும் அவரின் கூட்டாளிகள் மீதான வழக்கை பக்தாத்தில் உள்ள விசேட நீதிமன்றம் விசாரித்து வருகிறது. இந்த நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக குர்திஷ் இனத்தை சேர்ந்த ரிஸ்கார் அமீன் உள்ளார்.

குர்திஷ் இனமக்களை விஷவாயு செலுத்திக்கொன்றது உள்ளிட்ட வழக்குகளில் சதாமுக்கு நிச்சயம் மரண தண்டனை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சதாம் ஆதரவு கொரில்லாக்கள் ஈராக்கில் தினசரி கார் குண்டுவெடிப்புகளை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் சிறப்பு கோட்டின் தலைமை நீதிபதி திரிஸ்கார் அமீன் பதவி விலகப்போவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சதாம் கூட்டாளிகளுக்காக ஆஜரான வக்கீல்கள் இரண்டுபேர் கடந்த ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்டனர். தற்போது நீதிபதி ரிஸ்கார் பதவி விலக முடிவுசெய்துள்ளமை ஈராக்கில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சதாமுக்கு எதிராக தீர்ப்பளித்தால் தனது உயிருக்கும் பாதிப்பு ஏற்படும் எனப் பயந்து நீதிபதி ரிஸ்கார் இந்த முடிவை மேற்கொண்டாரா என்பது தெரியவில்லை. (த)

WORLD NEWS உலக தரிசனம்



ஈராக் தலைநகர் பாக்தாத்தில் குண்டுவெடிப்பால் தீப்பற்றி எரியும் அமெரிக்க ராணுவ வாகனத்தின் மீது ஏறி நின்று சந்தோஷத்தை கொண்டாடுகிறார். ஈராக்கை சேர்ந்த தீவிரவாதி ஒருவர்.



ஸ்பெயின் நாட்டின் சான்டா கோல்மாடி கிராம்னெட் என்ற நகரில் 4 மாடி குடியிருப்பில் காஸ் வெடித்தது. நகரில் உள்ள காஸ் இணைப்பு குழாயில் ஏற்பட்ட கசிவை ஊழியர்கள் சரிசெய்து கொண்டிருந்த போது இந்த விபத்து ஏற்பட்டது. இதில். 2 பேர் பலியாகினர். தீயை அணைக்கும்முயற்சியில் தீயணைப்புபடை வீரர்கள்.

# பாகிஸ்தான் எல்லையில் அமெ.விமானம் குண்டுவீச்சு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் எல்லையோர கிராமத்தின் தளபதி அய்மென்-அல்-ஜவாகிரி கொல்லப்பட்டுவிட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் இந்த தகவலை அமெரிக்க இராணுவமோ பாக்... அரசோ இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

ஆப்கானிஸ்தானில் இருந்து தலிபான் அமைப்பினர் விரட்டப்பட்ட பிறகு அல்-குவைதா தீவிரவாத தலைவர் ஒசாமா பின்லேடன் மற்றும் அந்த அமைப்பை சேர்ந்தவர்களை அமெரிக்கா வேட்டையாடி வருகிறது. அல்-குவைதா அமைப்பில் ஒசாமா பின்லேடனுக்கு அடுத்தபடியாக மிகவும் அதிகாரத்துடன் தளபதியாக செயல்பட்டு வந்தவன் அய்மென்-அல்-ஜாவாகிரி.

ஆப்கானிஸ்தானின் குணார் மாகாணத்தை ஒட்டி அமைந்துள்ளது பாகிஸ்தானின் பாஜவ்ர் பகுதி இங்குள்ள எல்லைக் கிராமம் தமதோலா. இந்த கிராமத்தில் தலிபான் ஆதரவாளர்கள் உள்ளனர். பக்ரீத் பண்டிகையை கொண்டாட ஜாவாகிரி மற்றும் சிலர் தமதோலா கிராமத்துக்கு வந்துள்ளதாக அமெரிக்க உளவுத்துறையான சி.ஐ.ஏ.நிறுவனத்துக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து நேற்று முன்தினம் அதிகாலை 3.30மணிக்கு அந்த கிராமத்தின் மீது அமெரிக்காவின் நான்கு ஆள் இல்லா விமானங்கள் பறந்துசென்று குண்டுகளை வீசின. மொத்தம் நான்கு குண்டுகள் வீசப்பட்டன.

இந்த திடீர் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் உட்பட 18பேர் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. அல்-குவைதா தளபதி ஜாவாகிரி கொல்லப்பட்டார் என்பதை உறுதிசெய்ய பாகிஸ்தான் அரசு மறந்துவிட்டது. எனினும் அல்-குவைதா அமைப்பை சேர்ந்த ஐந்து முக்கிய தீவிரவாதிகள் இந்த தாக்குதலில் இறந்து இருக்கலாம் என்ற தகவலை மட்டும் பாக் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (த)



தண்ணீரில் 13.2 அடி ஆழத்தில் தொடர்ந்து 37நிமி டங்கள் 45 வினாடிகள் பந்துகளை தூக்கிப்போட்டு பிடித்து அமெரிக்காவைச், சேர்ந்த அஷ்ரிதா பர்மன் கின்னஸ் சாதனை படைத்துள்ளார். தன்னுடைய சாதனையைத் தானே முறியடிக்கும் நோக்கத்துடன் மலேசியாவின் கோலாலம்பூரில் உள்ள கடல் வாழ் விலங்குகள் கர்ட்சியகத்தில் பந்துகளை தூக்கிப்போட்டு பிடிக்கிறார் அஸ்ரிதா. அருகில் பயங்கர சுறா மீன்கள் நிற்கின்றன.

# காங்கிரஸ் மாநாட்டை குழப்ப தீவிரவாதிகள் சதி முயற்சி

ஆந்திர மாநிலம் ஐதராபாத்தில் எதிர்வரும் 21ஆம் திதகி முதல் 23ஆம் திகதிவரை அகில இந்திய காங்கிரஸ் கட்சி மாநாடு நடைபெறவுள்ளது. இதில் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, 15மாநில முதல் அமைச்சர்கள், மத்திய மந்திரிகள், மற்றும் எம்.பிக்கள் எம்.எல்.ஏ.க்கள் கலந்து கொள்கின்றனர்.



குவைத் மன்னர் ஷேக் ஜாபர் அல்-அக மத் அல்-சாபா உடல்நலக் குறைவால் நேற்று காலமானார்.

இந்த மாநாட்டுக்குள் ஊடுருவி தீவிரவாதிகள் நாசவேலைகளில் ஈடுபடலாம் என்று மத்திய உளவுத்துறையினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளது. சர்வதேச அளவில் கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்ப மாவோயிஸ்ட் நக்சலைட்டுகள் அல்லது பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.யுடன் தொடர்புடைய சதிகாரர்கள் இந்த மாநாட்டுக்குள் ஊடுருவ திட்டமிட்டுள்ளனர். இந்த தகவலை மத்திய உளவுத்துறையினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

போலி அடையாளஅட்டையைப் பயன்படுத்தி மாநாட்டுக்குள் ஊடுருவி மத்திய மந்திரிகள் மாநில மந்திரிகள், மற்றும் முக்கிய பிரமுகர்களை கடத்திச்செல்லவும் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

சிறைகளில் உள்ள தங்கள் தலைவர்களை விடுவிக்கக்கோரி இந்த கடத்தல் வேலையில் நக்சலைட்டுகள் மற்றும் தீவிரவாதிகள் ஈடுபடலாம் எனவும் உளவுத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

இவை தவிர ஆந்திரா முதல் மந்திரி ராஜசேகர ரெட்டி மாநில உள்துறை மந்திரி ஜனாரெட்டி, டி.ஜி.பி.சுவரன்னுத்சென் ஆகியோர் மீது தாக்குதல் நடத்தவும் மாவோயிஸ்ட் நக்சலைட் குழுவைச் சேர்ந்த 4 பேர் ஐதராபாத்தில் சுற்றி வருவதாகவும் தகவல் கிடைத்துள்ளது. எனவே ஆந்திரா மாநிலம் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக ஐதரபாத் நகரம் முழுவதும் கடுமையான பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (த)

# ஹஜ் நெரிசலில் சிக்கி பலியான இந்தியர்களின் தொகை 44 ஆக உயர்வு

புனித ஹஜ் யாத்திரையின்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி பலியான இந்தியர்களின் எண்ணிக்கை 44ஆக உயர்ந்தது. இறந்தவாகளில் 39 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஹஜ் நிறைவு நாளன்று சாத்தான் மீது கலலெறியும் நிகழ்ச்சி மினா நகரில் நடந்தது. அதற்காக, மினா மலைப்பகுதியில் இலட்சக் கணக்கானவர்கள் குவிந்தனர்.

அப்போது ஜமாரத என்ற பாலத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 44 இந்தியர்கள், 37 பாகிஸ்தானியர்கள் உட்பட 23நாடுகளைச் சேர்ந்த 362பேர் பலியாகியுள்ளனர் என சவுதி உள்துறை அமைசசகம் நேற்று முன்தினம தெரிவித்துள்ளது. இதேவேளை சவுதி அரேபியாவில ஹஜ் புனித யாத்திரையின் போது நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அமெரிக்கா ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளது.

பல்வேறு நாடுகளில் இருந்து இலட்சக் கணக்கான மக்கள் சவுதி அரேபியாவில் ஹஜ் புனித யாத்திரை மேற்கொண்டுள்ளனர். இரண்டு நாட்களுக்கு முன் மினா என்ற இடதில் ஜமராத் பாலத்தின் மீது ஹஜ் பயணிகள் சென்றபோது நெரிசல் ஏற்பட்டது. இதில் 300க்கும் மேற்பட்டோர் இறந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

இறந் தவர்களின் குடும்பத்தினருக்கு அமெரிக்கா ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளது. இந்த இரங்கல் செய்தியை வெள்ளை மாளிகை செயலாளர் ஸ்காட் மெக்கல்லன் வெளியிட் டுள்ளார். (த)

ஒளிவிளக்குகள் வைத்திருப்போர் மற்றவர்களுக்கு அவற்றை வழங்கிச் செல்வார்களாக!

-பிளேட்டோ

வலம்புரி

# எரிக்சொல்ஹெய்மின் வருகை கிருஷ்ண தூதாகுமா?

பாரதப் போருக்கு முன்னதாக கிருஷ்ண பரமாத்மா துரியோதனனிடம் தூது சென்றார்.

பாண்டவருக்கு ஐந்து வீடாவது கொடுக்கும்படி கேட்டார். எதுவுமே தரமுடியாது எனத் துரியோதனன் கூறிவிட்டான்.

யாதவ குலத்தலைவனின் தூது தோல்வியில் முடிய, பாரதப் போர் குருஷேத்திரத்தில் நடந்தது. 18நாள் போரில் தர்மம் வெல்ல பாண்டவர்களுக்கு பாரதம் முழுவதும் ஆட்சிக்காக கிடைத்தது.

இவை இதிகாசக் கதையாக இருப்பினும் அதன் சாயல் ஈழப்போராட்டத்திலும் புரையோடியிருப்பதைக் காணமுடிகின்றது.

தமிழீழத்தைக் கோரிய விடுதலைப்புலிகள் , வடக்கு கிழக்கு இணைந்த சுயநிர்ணய ஆட்சியை ஏற்றுக் கொள்ள முன்வந்தனர். எனினும் அதற்கு இலங்கை அரசு இசைவதாக இல்லை.

போர்நடந்த போது யுத்தநிறுத்தத்தை ஒரு தலைப் பட்சமாக அறிவித்து சமாதான விருப்பை வெளிப்படுத்தியவர்கள் விடுதலைப்புலிகளே ஆயினும் இந்த உண்மையை உலக நாடுகள் மறந்து போயின.

யுத்தநிறுத்தத்தை ஒருதலைப்பட்சமாகக் கடைப் பிடித்து, சமாதான விருப்பத்தை விடுதலைப்புலி கள் வெளிப்படுத்தியதன் காரணமாகவே யுத்தநிறுத்த உடன்படிக்கை சாத்தியமாயிற்று.

இவ்விதம் தனிநாட்டுக் கோரிக்கையில் நெகிழ்வடைந்து சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்வந்த விடுதலைப்புலிகளை நேர்மையுடன் அணுகியிருந்தால் நிரந்தர சமாதானம் ஏற்பட்டிருக்கும்.

கபட நோக்குடன் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதை இலக்காகக் கொண்ட அரசால் தமிழர்களுக்கு எதனையும் வழங்க முடியவில்லை.

யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டு 5 வருடங்களாகின்ற போதிலும் இதுவரை தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கு வழிதேட முடியாத இலங்கை அரசினால் இனிமேலாவது எதனையும் வழங்க முடியுமா? என்பது கேள்விக்குரியது.

எதுவாயினும் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டு நீண்ட காலம் கடந்து விட்டமையால் அது காலாவதியாகிவிட்டது என்பதை சமகால நிகழ்வுகள் உணர்த்தி நிற்கின்றன.

யுத்தநிறுத்தம் அமுலில் இல்லை என்பது தற்போது உறுதியாகி விட்டநிலையில் மீண்டும் போர் என்பதே முடிவாகிவிட்டது.

ஆக ,போரா?சமாதானமா? என்பதைத் தீர்மானிக்கும் இறுதித்தூதாக எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கை வரும் எரிக்சொல்ஹெய்மின் விஜயம் அமையும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

# சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

அரசியலமைப்பின் 17ஆவது திருத்தத்திற்கு அமைய நியமிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அரச சேவைகள் ஆணைக் குழு மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு என்பன சம்பந்தமாக கடந்த டிசம்பர் மாதம் 14ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானங்களை வாபஸ் பெறுமாறும் ட்ரான்ஸ் பரன்சி இன்டர் நசனல் அமைப்பு ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசியலமைப்புச் சபை, அரச சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் தேர்தல் ஆணைக் குழு ஆகியவற்றை நியமிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தாமதிப்பதன் மூலம் இலங்கையில் பொறுப்பு வாய்ந்த அரச சேவைகள் சம்பிரதாயமொன்றை ஏற்படுத்துவதில் அரசியல் வாதிகளின் பங்களிப்பின்மையை அவ்வமைப்பு சாடியுள்ளது.

இந்நிலையில் தற்போது எழுந்திருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணல் மற்றும் பொறுப்பேற்றல் என்பவற்றிற்குப் பதிலாக ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் தங்களின் பொறுப்புக்களை ஒருவர் மீது ஒருவர் சுமத்துவதாக அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.சி.வெலியமுன குற்றம் சாட்டியுள்ளார்.

ஒட்டுமொத்த அரசசேவைக்கும் பொலிஸ் சேவைக்கும் சுயாதீன நிர்வாக வியூகமொன்று இன்மையால் இந்தப் பிரச்சினையின் பாரதூரம் தற்போது தெளிவாவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சுயாதீன அரச சேவையை நிறுவ வேண்டும் என்ற உண்மையான நோக்கம் இந்நாட்டு அரசியல்வாதிகளிடம் இல்லையென்பது தெளிவாவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அரச சேவைகள் ஆணைக்குழுவினதும் பொலிஸ் சேவைகள் ஆணைக்குழுவினதும் அதிகாரங்களை அரசியலமைப்பிற்கு முரணாக வேறு நிறுவனங்களுக்குத் தற்காலிகமாக வழங்குவதற்கு கடந்த டிசம்பர் மாதம் 14ஆம் திகதி அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானம் சந்தேகத்திற்கிடமானது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த)

# இலங்கை அரசுக்கும் -புலிகளுக்குமிடையில் மீண்டும் போர் மூள சர்வதேசம் அனுமதிக்காது

## இந்திய இராணுவத்தளபதி ஜெனரல் ஜே.ஜே.சிங்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மீண்டும் மோதல் மூள்வதற்கு சர்வதே சமூகம் அனுமதிக்காது என இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் ஜே.ஜே.சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய இராணுவத் தின நிகழ்வுகள் குறித்த செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவர் தொடந்து தெரிவிக்கையில்,


உலகம் தீவிர மோதலை எந்தப் பகுதியிலும் அனுமதியாது என தனிப்பட்ட கருத்தைக் கொண்டுள்ளேன். இருந்தாலும் இலங்கை அரசாங்கம் உடனடியாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தி சமாதான தீர்வு ஒன்றை காணவேண்டும். இதற்கு சர்வதேச சமூகம் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இலங்கையில், நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களையும் இந்தியா மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

இலங்கையில் மீண்டும் போர் மூளாதிருக்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம். சர்வதேச சமூகம் இதைத் தான் விரும்புகின்றது என்றார். (க-9)

# பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்காது தாமதிப்பது விடுதலைப் புலிகளுக்கு சாதகமாகவே அமையும்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்காது அரசு இழுத்தடிப்பது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சாதகமாகவே அமையுமென்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். போர் நிறுத்த உடன் படிக்கை ஏற்படுத்தப்பட்ட பின்னா ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் தாமதம் செய்தனர் என்றும் இக்காலப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் மென்மேலும் வளர்ச்சியடைந்து வருகின்றனர் என்றும் சர்வதேச சமூகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. ஆனால் நோர்வே நாடு சமாதான முன்னெடுப்புகளில் தொடர்ந்தும் ஈடுபடுவதற்கு ஜே.வி.பியினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.இருந்தாலும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஜே.வி.பியின் எதிர்ப்புகளை பொருட்படுத்தாது- நோர்வே அரசாங்கத்தை சமாதான முன்னெடுப்புகளில் அனுசரணையாளராக நியமித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் , இந்தியாவும் நோர்வே நாடும் சமாதான முன்னெடுப்புகளுக்கான அனுசரணையாளராக செயற்பட வேண்டும்.

எனினும் ஜே.வி.பியினர் அதனை ஏற்றுக்கொள்ளத் தவறியுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (க-9)

# மலையகத்தில் விடுதலைப்புலிகள்? சிங்கள நாளிதழ் தகவல்!

(கொழும்பு)

மலையகத்தில் தமிழ் மக்கள் வசிக்கும் பிரதேசங்களில் கரும்புலிகள்,கடற்புலிகள்,தற்கொலைதாரிகள் மற்றும் பிஸ்டல் குழு உறுப்பினர்கள் நடமாடுவதை உளவுப்பிரிவு கண்டறிந்துள்ளதாக சிங்கள நாளிதழ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை வெளிவந்த சிங்கள நாளிதழில் கொழும்பு நகரிற்கு வந்து குற்றச் செயல்களை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் பார்த்திருக்கும் விடுதலைப்புலி உறுப்பினர்கள் தற்போது கொழும்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேடுதல் நடவடிக்கைகளினால் மாத்தளை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் மறைந்திருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

மலையகத்திற்குள் வந்துள்ள இந்தக் குழுக்கள் பொது மக்களைப் போன்று நடமாடித்திரிவதாகவும் சிலர் கூலித் தொழிலாளர்களைப் போல் செயற்படுவதாகவும் உளவுப் பிரிவிற்குத் தகவல் கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# அல்லப்பிட்டியில் தொடரும் படையினரின் சோதனை

ஊர்காவற்துறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கிளைமோர் குண்டுத் தாக்குதல் சம்பவத்தையடுத்து அல்லப்பிட்டியில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் பயணிகள் வாகனங்களை நிறுத்தி கடுமையான முறையில் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வழியால் பயணிக்கும் பயணிகள் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு சோதிக்கப்படுகின்றனர்.இதனால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (க)

# வீடுகளற்ற மீனவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா கடனுதவி

மீனவர்களின் வீடில்லாப் பிரச்சினையை தீர்ப்பதற்கு மீளப் பெறாத வகையில் அழிக்கப்பட்டு வந்த நிதியுதவியை ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரிப்பதற்கு அடிப்படை வசதிகள் அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. குறைந்த வருமானம் உள்ள வீடில்லாத மீனவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் நோக்கில் இநதத் திட்டம் செயற்படுத்தப்படுவதாக பிரதி அமைச்சர் சந்திர சிறிகஜ தீர தெரிவித்துள்ளார். நன்னீர் மீன்பிடி வளத்தில் ஈடுபட்டுள் ளவர்களுக்கும் இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது. எனவே குறிப்பிடப்பட்ட நிதியுதவியைப் பெற்றுக் கொள்ள தகுதியுடையவர்கள் பிர்தேச மீன்பிடி செயலகங்கள் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

தகுதியுடையவர்கள் தொடர்பாக பரிசீலிப்பதற்கு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு 4 கட்டமாக நிதியுதவி வழங்கப்படுமென்று பிரதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



தொட்டதையெல்லாம் பொன்னாக்கும் பரிசவேதியைப் போன்றவர் இறைவன் . தொட்டால் அந்தப் பொருளின் வடிவம் மாறாது. ஆனால் அதன இயலபு மாறும். நமது மனித வடிவம் அப்படியே இருக்கும். ஆனால் பிறருக்கு தீங்கோ பாவமோ செய்யும் எண்ணம் நமக்கு இருக்காது என்று என் குரு தேவர் கூறுவதுண்டு.

சுவாமி விவேகானந்தர்

# ஓமந்தை–உயிலங்குளம் பகுதியில் பயணிகளுக்கு பாதுகாப்பு ஏற்பாடு

## இராணுவத் தரப்புத் தெரிவிப்பு

(வவுனியார்)

ஓமந்தை மற்றும் உயிலங்குளம் பகுதியில் அமைந்துள்ள இராணுவச் சாவடிகளுக்கூடாக பயணிக்கும் பொது மக்களுக்கு விசேட பாதுகாப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சோதனைச் சாவடியூடாக பயணிக்கும் அனைவருக்கும் அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்குமாறு முப்படையினருக்கும் பொலிஸார் ஆலோசனை வழங்கியுள்ளதாக இராவணு நடவடிக்கை செயலகப் பணிப்பாளரும் பேச்சாளருமான பிரிகேடியர் அத்துல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் தற்போதைய சூழ்நிலைக்கு மத்தியிலும் ஏ-9 வீதியில் உள்ள சோதனைச் சாவடிகளின் அன்றாட நடவடிக்கைகளில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை. எனினும் ஏ-9 வீதியைப் பயன்படுத்தி தனியார் துறையினர் வடபகுதிக்கு கொண்டு செல்லும் பொருட்களின் அளவு குறைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

அரச சேவைகள் யாவும் முன்னர் நடைபெற்றது போன்று இடம் பெறுவதாகவும் அரச மற்றும் தனியார் துறையினருக்கு சொந்தமான 400 தொடக்கம் 500 வரையிலான உணவு லொறிகள் நாளாந்தம் குறிப்பிட்ட வீதியூடாகவடபகுதிக்கு செல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(ச-39)

# இலங்கை வரும் பாலசிங்கத்திற்கு ஹெலியில் விசேட பாதுகாப்பு!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின்அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் கிளிநொச்சி விஜயத்தின் போது பலத்த பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் கிளிநொச்சி விஜயத்திற்கு அரசாங்கம் ஹெலி வசதி வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது. இந் நிலையில் அவரின் இலங்கை விஜயம் உறுதிப்படுத்தப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வார இறுதியில் இலங்கை வரும் அவர் கொழும்பில் இருந்து கிளிநொச்சிக்கு பயணம் செய்யும்போது நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர்ஹான்ஸ் பிறட்ஸ்கர், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உயர் அதிகாரிகள், அரச மற்றும் விடுதலைப்புலிகளின் சமாதான செயலக அதிகாரிகள் ஆகியோர் ஹெலிகொப்டருக்குள் இருப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நேரடிச் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து ஆராய்வதற்காக எதிர் வரும் 23 ஆம் திகதி இலங்கை வரும் விசேட சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் 25 ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துக் கலந்துரையடவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அது குறித்து உறுதிப்படுத்த முடியவில்லை.

(ச)

# குடாநாட்டிலிருந்து தொடர்ந்து வன்னிக்கு இடம்பெயரும் மக்கள்

## நேற்று மட்டும் 120 குடும்பங்கள் இடம்பெயர்வு

(கிளிநொச்சி)

யாழ்.குடாநாட்டில் இருந்து வன்னிக்கு மக்கள் இடம் பெயர்ந்த வண்ணம் உள்ளனர்.

நேற்று மட்டும் 120 குடும்பங்கள் இடம் பெயர்ந்து முகமாலை சோதனைச் சாவடியூடாக வன்னிக்குச் சென்றுள்ளனர்.

இடம் பெயர்ந்து வரும் குடும்பங்களின் உடனடித் தேவைகளையும் நலன்களையும் கவனித்து வருதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

தைப்பொங்கல் தினத்தன்றும் 150 குடும்பங்கள் குடாநாட்டில் இருந்து வன்னிக்கு வந்திருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிவித்துள்ளது.

இடம் பெயர்ந்து வருகின்ற மக்களின் உடனடித்தேவைகளை கவனிப்பதற்கு வசதியாக பளைப் பகுதியில் இடைத் தங்கல் முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு குடும்ப விபரங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பிரதேச இடைத்தங்கல் முகாமிற்கு அவர்கள் அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

(ச-4)

# கைக்குண்டு வீச்சில் நால்வர் படுகாயம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் இருந்து 3 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் அன்பு வெளிபுரத்தில் நேற்று இரவு 8 மணியளவில் விமானப் படையினர் ஒருவர் மீது கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது.

இதன் காரணமாக அவர் பலத்த காயங்களுக்கு இலக்கான நிலையில் திருகோணமலை பொது அரசினர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் மூன்று பொது மக்களும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ச-4)

## தூதுவர்...

நாளை கிளிநொச்சிக்குச் செல்லும் பிறட்ஸ்கர் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

(ச)

## யாழ்ப்பாணத்தில்...

நாவலர் வீதியில் புகையிரத வீதியில் அமைந்துள்ள இராணுவத்தின் காவலரண் மீது நேற்றுமாலை கைக்குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது. எனினும் எவருக்கும் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இது இவ்வாறிருக்க நாச்சிமார்கோவிலடியில் நேற்றுமாலை இராணுவத்தினர் மீது வீசப்பட்ட கைக்குண்டு வெடிக்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

(ச-4)

## அமெரிக்க...

கொழும்புத் தகவல்கள்தெரிவித்தன. இக்குழுவில் அமெரிக்க இராஜாங்க அமைச்சு அதிகாரிகள் சிலரும் இடம்பெறவுள்ளனர். தாம் தேடிஅழித்தொழித்து வரும் பயங்கரவாதிகளுடன் இலங்கையில் உள்ள ஆயுதக் குழுக்களுக்கு தொடர்பு ஏதும் உள்ளதா?

அந்த அமைப்புக்களில் நிதி கொடுக்கல் வாங்கல் என்ன போன்ற விடயங்களும் இந்த் குழு கொழும்பில் மேற்கொள்ளவுள்ள உயர் மட்டப்பேச்சுக்களில் இடம்பெறுமென தெரிய வருகின்றது.

இதேவேளை இக் குழு இலங்கை வரும் அதேதினம் அமெரிக்க இராஜாங்க அமைச்சு அரசியல் விவகார அமைச்சர் நிக்கலஸ் பேர்னஸ் தலைமையிலான குழுவினர் இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு கொழும்பு வரவுள்ளனர்.

(ச-4)

## பேச்சை உடனடியாக...

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்ந்து இழுபறிப்பட்டுக் கொண்டிருக்காமல் ஐரோப்பிய நாடு ஒன்றின் தலைநகரில் அவர்களுடன் உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள், நாடு பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

இந்நிலையில் பேச்சுக்கான இடத்தினை தெரிவுசெய்வதில் காலத்தை இழுத்தடித்துக் கொண்டிருக்க முடியாது. இவ் விடயத்தில் விரைவான தீவிரப் பேச்சுவார்த்தையைக் காண்பித்து ஐரோப்பிய நாடு ஒன்றின் தலைநகரில் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை அமைச்சர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அது தொடர்பிலான முடிவினை எதிர்வரும் 19 ஆம் திகதி இடம் பெறவுள்ள சர்வகட்சி மாநாட்டில் அறிவிப்பதாக மூத்த அமைச்சர்களிடம் உறுதியளித்துள்ளார்.

(ச-4)

## பொங்கு தமிழ்...

பைச்சேர்ந்த பிரதிநிதிகள், இந்து மதகுருமார்கள் ,பாட சாலை அதிபர்கள்,மாவட்டத்தின் எல்லைக்கிராமப் பிரதிநிதிகள் மற்றும் மீனவர் சங்கப்பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை இச் சந்திப்பில் பிரதிப்பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர் சமூகமளித்திருந்தனர்.

இச் சந்திப்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து யோசனைகள் பாதுகாப்புத் தரப்பினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்தே இப்போராட் டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

- முகமூடி அணிந்த இராணுவத்தினர் சேவையில் ஈடுபடுத்தப்படக்கூடாது.
- வீதிக்கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரைவிட பொலிஸாரின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும்.
- சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்படுபவர்கள் தொடர்பான எழுத்துமூலமான பற்றுச்சீட்டு உடனடியாக அவரது உறவினருக்கு வழங்கப்படவேண்டும்.
- ஊர்காவற் படையினர் தனித்து சேவை யில் ஈடுபடுத்தப் படக்கூடாது.
- உயர் பாதுகாப்பு அதிகாரிகள் தமக்கு கீழே உள்ள படைத்தரப்பினரை கடமை நேரத்தில் அடிக்கடி கண்காணிக்க வேண்டும்.

இக்கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்தே ஹர்த்தால், கடையடைப்பு என்பன இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளைஇச்சந்திப்பில் கருத்துத்தெரிவித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலசூரிய யாழ்ப்பாணம் ,மட்டக்களப்பு, கொழும்பு போன்ற இடங்களில் ஹர்த்தால் ,ஆர்ப்பாட்டங்கள் என்பன இடம்பெறுகின்றன.

இருந்தும் அவை ஒரேநாளில் முடிவடைந்து விடுகின்றன. எனினும் திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரம் ஹர்த்தால், கடையடைப்பு என்பன தொடர்ச்சியாக இடம் பெறுவதால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுவதாக கவலை வெளியிட்டார்.

இக் கூட்டத்தினையடுத்து கண்காணிப்புக்குழு அலுவலகத்திலும் சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

(ச-4)

## ஊர்காவற்துறையில்...

மாவட்ட நீதிவான் சம்பவத்தைப் பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத் பரிசோதனைக்காக யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு ஊர்காவற்துறைப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை நேற்று முன்தினமிரவு இனந்தெரியாதோர் பிரஸ்தாப நபரைக் கடத்திச்சென்றபோது பொலிஸ் நிலையத்திற்கு உறவினர் செல்லமுற்றபட்டபோதிலும் இரவு நேரத்தில் வெளியில் செல்லமுடியாத நிலை காணப்படுவதால் அவர்கள் நேற்றுக் காலையே சென்று முறையிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ச-4,39)


## பதவி வெற்றிடங்கள்

செயல்திறன் அரங்க இயக்கம் நடைமுறைப்படுத்தும் உள சமூக மற்றும் நாடக அரங்கச் செயற்திட்டங்களில் உள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1.நாடகத்துறைப் பயிற்றுவிப்பாளர் (ஒருவர்)**

சங்கீதம்/நடனம்/ நாடகம் ஆகியதுறைகளில் பட்டம் பெற்றிருத்தல் /வட இல்ங்கை சங்கீத சபையினால் நடாத்தப்படும் 5ம், 6ம் தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் நாடகத்துறை அனுபவம்.

கொடுப்பனவு:-ரூபா 10,000/=

**2.போதனாசிரியர் (ஒருவர்)**

வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்படும் ஆசிரியர் தரப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் க.பொ.த. உயர்தரத்தில் நாடகத்தில் சித்தியடைந்திருத்தல்.

கொடுப்பனவு:-ரூபா 8,000/=

விண்ணப்ப முடிவுத் திகதி: 25.01.2006
விண்ணப்ப முகவரி:
செயல்திறன் அரங்க இயக்கம்
ACTIVE THEATRE MOVEMENT
அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(C-172)











இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.8 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.